560 ...கி ஹூ }
கார்த்திகை மீ }

{ ஸம்புடம் - 8
{ ஸஞ்சிகை - 11

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகெட்)

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

{ November 1949
{ Vol. 8 No. 11

விஷய ஸூசிகை

பக்கம்.

1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	314
2.	அபிநவ தசாவதார தத்வம்	317
3.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	324
4.	நற்போது போக்த	328
5.	மனித வாழ்க்கையின் லக்ஷ்யம்	332
6.	செய்திகள்	335
7.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	339
8.	ஸம்பாதகரின் குறிப்புகள்	340
9.	புத்தக விமர்சனம்	343

———:o:———

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

வ்யாஸங்களைத் தெளிவான எழுத்துக்களில் ஒரே பக்கத்தில் பதத்திற்குப் பதம் இடம் விட்டு, பாராக்களையும் நன்கு கண்டு, எழுத்துப் பிழைகள் இல்லாமல், வ்யாஸங்களைப் பார்த்து அப்படியே அச்சுக் கோக்கும் நிலைமையில் எழுதி யனுப்பவேண்டும். தாங்கள் எடுக்கும் மேற்கோள்களுக்கு (ப்ரமாணங்களுக்குக்)கூடியமட்டில் ஆகாரத்தையும் நன்கு குறிப்பிடுவதுடன், அவைகளுக்குப் பதவுரையோ மொத்த உரையோ எழுதவேண்டும். மேல் கண்டபடி எழுதியனுப்பப்பட்டால், தாமதமின்றி அடுத்த ஸஞ்சிகைகளில் அவை வெளிவர ஸௌகர்யமுண்டு. ப்ரசுரிக்கப்படாத தங்கள் வ்யாஸங்களைத் திரும்பிப்பெற விருப்ப முள்ளவர்கள், வ்யாஸங்களை அனுப்பும்போதாவது பிறகாவது போதிய தபால் ஸ்டாம்புகளுடன் தக்கள் விலாஸத்தை யனுப்பினுல் விளம்ப மில்லாமல் திருப்பி யனுப்பப்படும்.

ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யத்தைச் சுருக்கமாக மூலத்திற்கு ஒத்தபடி எளிய தமிழ் வசனநடையில் எழுதி, மற்றும் புராணங்களில் சொல்லியிருந்தால் அதையும் எடுத்து எழுதியனுப்புவதுடன், ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் தொடக்கமாக அநுஸந்திக்கப்பட்டுவரும் ஆசாரியர்களுடையவும், விசேஷமாக ஸ்ரீ அழகியசிங்கர்களுடைவும் வைபவம், காலம், முதலியவைகளைக் கூடிய வரையில் சுருக்கமாகக் குருபரம்பரை முதலிய தகுந்த ப்ரமாணங்களுக்கு ஒத்தபடி வித்வான்கள் நன்கு பராமர்சித்து எழுதியனுப்பினுல் 5, 6 மாத ஸஞ்சிகைகளில் அவைகளைத் தொடர்ந்து 4-பக்கம் வீதம் போட ஸௌகர்ய முண்டு. இது ஒரு பெரிய கைங்கர்யம். நன்ருய் எழுதப்பட்ட வ்யாஸத்திற்கு பரிசு கொடுக்கவும் உத்தேச முண்டு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 19
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	விரோதி ௵ கார்த்திகை ௴	ஸஞ்சிகை 11

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

——— :: ———

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

நாரதர் :—கோபனை அத்தனை அலக்ஷ்யமாக நினைக்கக் கூடாது. இவன், லோபன் காமன் என்னும் இருவரும் தன் முன்னால் விழுந்துவிட்டதைப் பார்த்து மிகவும் வெகுண்டு விவேகரைப் பலமாகத் தாக்குகிறான்.

"[illegible]
[illegible]"

'ஜிகாம்ஸை' என்பது பிறரைக் கொல்லும் ஆசை. கோபனுக்கு இவள் பத்நீ. கோபம் பிறரைக் கொலை செய்விக்கும். இரு கக்ஷியினர்க்கும் கோபம் முற்றவே ஒருவரை யொருவர் கொல்வதும், ஒருவரால் ஒருவர் கொல்லப்படுவதுமாக முடியும். இப்படி ஒருவரை யொருவர் கொல்வது வத்யகாதுகபாவம். கொல்பவரும் கொல்லப்படுபவரு மென்று கோப முற்றவர் இருவகையாய்ப் பிரிக்கப்படுகிறார்கள். உலகத்திலேயே மநுஷ்யருக் குள்ளும் ப்ராணிகளுக் குள்ளும் இப்படி பரஸ்பர ஶத்ருத் தன்மையும், அதனால் ஒருவரை யொருவர் கொல்வதுமாய் இருக்கிறது. காமனும் விரக்தியும் ஸஹஜ ஶத்ருக்கள். அப்படியே லோபமும் துஷ்டியும். அப்படியே கோபமும் க்ஷமையும்.

"[illegible]
[illegible]"

நமக்குக் கை, கால், நகம், பல் முதலியவையெல்லாம் ஆஹார விஹாராதிகளுக்கு உபயோகமாயும், பகவத் பாகவத கைங்கர்யங்கள் செய்யவும் கொடுக்கப்பட்டுள்ளன. கோபாவேஶத்தில், இவை பிறரை ஹிம்ஸிக்கவும் கொல்லவும் உபயோகப்படுகின்றன. இந்தக் கோப நெருப்பை அவித்து ஶமநம் செய்ய, விவேகர், க்ஷமை என்னும் பெண்ணைத் தைர்யத்துடன் எதிரில் நிறுத்தியிருக்கிறார். பாரதத்தில்,

"[illegible]
[illegible]"

என்று சுக்ராசார்யர் தம் பெண் தேவஸேனையினிடம் கூறினார்.

தும்புரு :—

"[illegible]
[illegible]"

29205

நம்மீது கோபிப்பவரை நாம் கோபியாமல் அவரிடம் பொறுமையையே கைப் பற்றினல், கோபித்தவருக்கே வெட்க முண்டாகி அவர் கோபம் தணியும். இந்தக் கோபன் க்ஷமை என்னும் அஸ்த்ரத்தினல் வெட்கங்கொண்டு அடங்கு கிருன். எதிர்நோக்கி அடிக்க நெருங்கினவன், வெட்கிப் பின் வாங்குபவன் போலக் காணப்படுகிருன். முன் வைத்த கால் எதிர்நோக்கி ஓடிவர வெட்கி, முன்னும் போகாமல் நிற்கவும் மாட்டாமல் திகைக்கிறது. 'வ்ரீள' என் பதற்குக் 'கோபம்' 'விக்நம்' என்று இரண்டு பொருள்கள் உண்டு. ப்ரதி கனுக்கு (கோபனுக்கு) ப்ரதிகம் (விக்நம்) வந்ததென்று ரஸம். முன்வைத்த காலைப் பின்னே இழுப்பதுபோ லிருக்கிறது. அது தோல்விக்கு அடையாள மாகும்.

நாரதர் :—[தன்னுள்ளே சிரிப்புடன்]

"க்வசித் ஸங்கடவிஷயே ஸாஹஸிகா நாம் ஸம்ப்ரதாயஸ்ஸ்வது:"

சில ஸமயத்தில் மிகவும் நெருக்கடியில் நல்ல யுத்த வீரருக்கு 'அபஸர்ப்பம்' என்கிற 'சற்றுத் திரும்புதல்' ஒப்புக்கொள்ளப்படுகிறது. அது யுத்தமுறையே யாகும். கர யுத்தத்தில் கரன், தன் தேஹம் முழுதும் ரக்தமயமாயும் துர்க்கந்த வீச்சோடும் ராமனுக்கு அம்பு தொடுக்க ஸங்கடமான நெருக்கத்தில் வந்த போது 'க்ருதாஸ்த்ரரான ராமன் விக்ரம வேகத்துடன் இரண்டு மூன்று அடிகள் அபஸர்ப்பம் செய்தார்' என்று ருஷி கூறினர். அங்கே 'க்ருதாஸ்த்ர:' என்பதற்கு, 'தநுர்வித்யையை நன்கு ஓதியவர்' என்று பொருள் கூறப் பட்டது. இங்கு நாரதர் முகமாக ராமன் அபஸர்ப்பம் செய்தது யுத்தநூல் முறைக்கு ஸம்மதமே என்று காட்டப்படுகிறது. கர யுத்தத்தில் 'கோப மாஹாரயத் தீவ்ரம்' என்று உக்ரமான கோபத்தை ராமன் ஏறிட்டுக்கொண்ட தாகக் கூறப்பட்டது. அந்தக் கோபனுக்கு இப்போது அபஸர்ப்பம் நேருகிற தென்று நாரதர் சிரிப்பின் கருத்துப்போலும். ப்ரபோத சந்த்ரோதயத்தில் 'க்ரோதே சாந்திவசேந க்ஷாந்த்யா க்ருதே' என்கிற ஒரு ச்லோகத்தில் கோபத்தை க்ஷமையால் ஜயிப்பது வர்ணிக்கப்பட்டது.

தும்புரு :—[ஸந்தோஷத்துடனும் பரபரப்புடனும்]

"குருவதமபி க்ருத்வா ஜாக்ரதோ யஸ்ய க்ரோத:
ப்ரதிதஹதி த்வந்தம் க்ஷாந்திப்ரஹ்ருதி ஷ்வஸ்வ ।
ஸ்வயமிஹ ஸமாதிஸ்ஸ்ரோதஸா ஸோ(அ)பி பாதக:
க்ஷணருசிரிவ தம் க்ஷாந்த்யா ஹ்ருத்யஶேஷம் தாபந: ॥"

கோபத்தின் பராக்ரமத்தையும் அதன் தீங்கையும் வர்ணித்து, அது க்ஷமா குணத் தால் மின்னெளி (க்ஷணருசி) போல் தத்க்ஷணமே மறைந்துபோவதை விளக்கி னர். குருவதம் என்பது பாதகங்களில் மிகப் பெரிய (குருவான) பாதகம். குரு பாதகம் என்பது பெரிய ஆபத்தாக ஸ்தோத்ராத்நத்தில் குறிக்கப்பட்டி ருக்கிறது. தகப்பனுகிய குருவையும் தலைகிள்ளும்படி செய்வது கோபம்.

'ப்ரஹ்மஹத்யை.' ஒரு ப்ராஹ்ம ஜாதி ஸம்பந்த மாத்ரமுள்ளவர் விஷயத்திலும் ஹத்யாதோஷம் கொடிதென்பர். த்ரிமூர்த்திகளில் ஒருவர்பேரில் மற்றொருவருக்கு வந்தது கோபாவேசம். கோபித்தவர் விச்வாசார்யர். மற்றவரும் அப்படியே. குருவின் முக விஷயத்திலேயே ஹிம்ஸை நேர்ந்ததென்பதையும் 'முக' என்பதால் ஒருவாறு ஸூசிக்கலாம். 'முதலிய' என்ற பொருளும் கொள்ளவேணும். த்ரிமூர்த்திகளும் காமன் வசப்பட்டவரென்று காமன் முதல் அங்கத்தில் வீர்யம் பேசினான். இங்கே ஒரு மூர்த்தி, கோபத்திற்கு வசமானதைக் காட்டுவது. இது கோபனுடைய பராக்ரம விளையாட்டு. குருவின் முகத்தின் கொலை அவனுக்கு லீலை. அக்கொலையில் இவன் விளையாட்டின்ப ரஸத்தைத் தருகிறான். 'க்ரூரம்' 'கடோரம்' என்று செய்கையின் கொடுமையைக் கூறி, அது இன்ப ரஸமளிப்பதை 'க்ரீடா' என்று காட்டும் அழகு ரஸிக்கத்தக்கது.

தக்ஷர் ப்ரஜாபதி. அவர் யஜ்ஞத்தில், அவரையும் மற்ற பெரியோரையும் அவரது யஜ்ஞத்தையும் த்வம்ஸம் செய்யும்படி செய்தவன் கோபன். ஸ்ரீ பாகவதம் நாலாவது ஸ்கந்தம் ஐந்தாம் அத்யாயத்தில் கோபனின் பராக்ரமம் விளக்கப்பட்டது. ப்ருகுவுக்கு மீசையறுபட்டது. மீசையை முறுக்கிக் கொண்டு அவர் சிரித்ததால், அவர் மீசையின்பேரில் கோபம் சென்று விளையாடிற்று. ஸூர்யனுக்குப் பல் உடைந்தது. அவர் பல்லைக் காட்டிச் சிரித்தவர். 'யஜமாந வபொ: கஸ்யகாயாத்தே நாஹநத்திம:'. 'க:' என்பவர் ப்ராஜாபதி தக்ஷர். அவர் பசுவை ஆலம்பநம் செய்யவேண்டிய யாகத்தில் அவரே பசுவாக விசஸநம் செய்யப்பட்டார். 'ஸ்வயம் ஹவிர்வராதி:'—கோபனின் ஸ்வரூபம்தானென்ன?? அது இனியதோ? ஒரே எரிச்சல். அது ஸ்வர்கத்திற்கே சத்ரு. 'ஸ்வர்க்காபவர்க்கவிகாதக:'—ஸ்வர்க்க போகம் கிடைப்பதற்கும் மோக்ஷம் கிடைப்பதற்கும் தடைசெய்வது கோபம். இக்கோபமென்னும் அக்நி, க்ஷாந்தியின் குளிர்ந்த தாரைகளால் தணியும். தக்ஷ யஜ்ஞமே இதற்கு உதாஹரணம். அடுத்த அத்யாயத்தில், தக்ஷர், தம் தேஹத்தோடு தூங்கி எழுந்தவர்போல ஈச்வரர் ப்ரஸாதத்தால் எழுந்து துதி செய்ததையும், ப்ருகுவின் மீசை மீண்டும் முளைத்தது முதலியவற்றையும் வர்ணித்திருக்கிறது. தலை போனவருக்குத் தலையும், மீசை போனவருக்கு மீசையும், பல் போனவருக்குப் பல்லும் மீண்டும் உடனே அநுக்ரஹிக்கப்பட்டன.

நாரதர்:—இந்த க்ஷமாகுணம் எல்லாக் குணங்களையும் அதிசயித்தது. இந்தக் குணமுடையவருக்கு ஒரு கெடுதலும் முடிவில் வராது. பொறுத்தார் பூமியாள்வார்.

" விஸ்வஸ்மிந்நிஹிதே ஸௌராவணை: க்ஷமீ ஸ்வஹஸ்த:
க்ஷத்வா க்ஷமாம் க்ஷணாந்தரம் ஸ்வம் க்ஷோணீ நிஷகீக்ஷ்ய ।
ஹத்வா ச தத்க்ஷ்ணம் வீரா ஹிரண்யஸிரஸம் த்ருதம்
நத்வா ஸ்திதா நாவிஷ்க்ருதோ க்ஷமாவாஹதி ஸம்ஹத: ॥

க்ஷமையைத் தரிப்பவர் கோபத்தால் கலங்கார்; கோபிப்பவரை எதிர்த்துப் பதில் ஹிம்ஸை செய்யார். 'க்ஷமாப்ருத்' என்று மலைக்குப் பெயர். க்ஷமை என்னும் பூமியைத் தாங்குவது மலை. க்ஷமை என்னும் குணத்தைப் பரிப்பவரென்று ச்லேஷையால் பொருள். 'மேரு: ஶிகரிணாமஹம்' என்று புகழப்பட்ட பொன்மலையை த்ருஷ்டாந்தமாக எடுக்கிறார். மேருமலை விபுத மஹிதம். அது தேவர்களால் பூஜிக்கப்படுவது. க்ஷமையுடையவர் பண்டிதர்களால் புகழப்படுவர். 'நவஞ்ஞிதோ ஹ்ருஷ்யதி' என்று மஹாபாரதம். 'ஐராவதம் கஜேந்த்ராணாம்' என்று பகவத் விபூதியாகப் புகழப்பட்ட ஐராவதம், மதஜலம் பெருகிச் சேறாக உறைந்திருக்கும் தன் கன்னத்தின் தினவை அடக்குவதற்கு அந்தப் பொன்மலைத் தங்கப்பாறையில் வேண்டியமட்டும் சொரிந்து கொடுக்கட்டும். தன் தந்தங்களால் முட்டிமுட்டி வளைந்து 'வப்ரக்ரீடை' என்னும் விளையாட்டை விளையாடட்டும். அதனால் பொன்மலைக்கு மலிநமோ க்ஷோபமோ வந்து விடுமா? [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அபிநவ தசாவதார தத்வம்

[ஸ்ரீ. உப. வித்வான் மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு.]

ஸர்வேச்வரன் பராங்குச பரகாலாதி ரூபததாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி, மேகங்கள் ஸமுத்ர ஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போலே, வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியதாக ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலே குருபரம்பரா ஸாரத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளியிருப்பது ஸாம்ப்ரதாயிகர் அறிந்த விஷயம்.

"அபிநவ தஶாவதாரருசிதேந ஸ்ரீயாசகாரணே ஸமாஶ்ரித ஸ்நேஹா !
ஶமயஸி தம: ப்ரஜாநாம் ஶாஸ்த்ரமயேந ஸ்திர ப்ரதீபேந ॥"

என்று தயாசதகத்திலும் இவ்வர்த்தம் ஸூசநம் செய்யப்பட்டுள்ளது. "கருணையே! நீ ஸஜாதீய நிலையில் ஆசைகொண்டாய். அபிநவ தசையை அடைந்தாய். அந்நிலையில் த்ரமிட வேதமாகிய ஸ்திர தீபத்தை ஏற்படுத்தினாய். ஸர்வாதிகாரமான அதனால் எல்லா ப்ரஜைகளின் இருளையும் போக்குகிறாய்" என்கிற அர்த்தவிசேஷமும் இதில் விளங்குகிறது.

சததூஷணி 56-வது வாதத்தில் ஆழ்வார்களை ப்ரஸ்தாவம் செய்து, "ஸ்ருதிஸித்தாநாமநந்தகருடாதீநாமிச்சாவதார ஹேதோ: இதி வாரண ப்ரஸக்தே:" என்று 'இவர்கள் அநந்த கருடாதி நித்யஸூரிகளின் ஸ்வேச்சாவதாரம்

என்பதாகப் புராண ப்ரஸித்தம்' என்று ஸ்தாபகம் செய்தருளினர் ஸ்வாமி தேசிகன். இங்கு ஆழ்வார்களைப் பகவதவதாரங்களாகவும் கொண்டதற்குச் சில விசேஷ காரணங்கள் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளத்தில் இருந்திருக்க வேண்டும்.

'மீனே டாமை கேழல் கோளரியாய்
வானர் குறளாய் மழுப்படை முனியாய்
பின்னு மிராம ரிருவராய்ப் பாரில்
துன்னியூ பரம்தீர் துவரை மன்னனுமாய்க்
கலிதவிர்த் தளிக்கும் கற்கியாய்'

[மும்மணிகோவை]

என்பது பூர்வ தசாவதார க்ரமம்.

'வையகமெண் பொய்கைபூதம் பேயாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுரகவி
பொய்யில்புகழ் கோழியர்கோன் விட்டுசித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடிபா ணாழ்வார்
ஐய னருள்கலியன்........' [ப்ரபந்தஸாரம்]

என்பதாக அபிநவ தசாவதார க்ரம முள்ளது. இதில், 'தக்ஷிதீயம்ஜந' என்ற ஜ்ஞாந ஜந்மத்தையிட்டு மாறனுக்கு மதுரகவிகளைப் பிற்பாட ராக்கியது. த்ரிவிக்ரமாவதாரத்தை வாமநாவதாரத்தில் அந்தர்ப்பாவம் செய்து தசாவதாரம் என்பதுபோல், மதுரகவிகளை நம்மாழ்வாரோடும் நாச்சியாரைப் பெரியாழ்வாரோடும் அந்தர்ப்பாவம் கொண்டு அபிநவ தசாவதார மென்று அருளியது. ஸாது பரித்ராணார்த்தமாய்ப் பூர்வாவதாரமும் அபிநவாவதாரமும் அமைந்து எண்ணிக்கையிலும் ஒற்றுமைப்பட்டிருப்பதால், ஆழ்வார்களை 'அபிநவ தசாவதாரம்' என்று ஆசார்யன் அருளினர் என்று நிர்வஹித்தல் எளிதானது. உற்று நோக்குமிடத்தில் அவதார தசகங்கள் இரண்டிற்கு முள்ள ப்ரத்யேக ஸாரூப்யமும் ஸ்வரஸமாய்த் தோன்றுகிறது. அதாவது:—பூர்வாவதாரத்தில் (மீன், ஆமை, கேழல் ஆகிய) முதல் மூன்றும் திர்யக்குகளோடு ஸஜாதீயங்களாகவும், (கோளரி யென்னும்) நான்காவது நரம் கலந்த சிங்கமாகவும், மற்றவை மநுஷ்ய ஸஜாதீயங்களாகவும் நிற்கும். அபிநவத்திலும் முதலாழ்வார் மூவர் படிகளும் 'பூதம் பேய்' என்றாற்போல் திர்யக்குகளோடு வாசியற்று நிற்கும். நான்காவது அவதாரம் ஒன்றாய் வளர்ந்து மற்றொன்றாய் ஜாதித்வய ஸமாவேசம் பெற்றுள்ளது. மற்றவை மநுஷ்ய ஸஜாதீயங்களாகும். இவ்வாறு மூன்று பிரிவுகளாக அவதார தசகங்கள் இரண்டில் ஒவ்வொன்றும் அமைந்துள்ள ஒற்றுமை உற்று நோக்கத்தக்கது.

வாமநனும் மாறனும்

இனி, பூர்வோத்தராவதார தசகங்களுக் குள்ள ப்ரத்யேக ஸாரூப்யமும் மிகவும் பொருந்தி நிற்பதை அநுபவிக்க ப்ராப்தமாகிறது. 'பராங்குச பரகாலாதி ரூபத்தாலே' என்று ப்ரதம பரிகணிதமான அபிநவாவதாரத்தை

அநுபவிப்போம். பூர்வ தஶகத்தில் ஐந்தாவது வாமநாவதாரம். அபிநவத்தில் ஐந்தாவது பராங்குஶாவதாரம். வாமநனே மாறனாக அவதாரம் செய்ததாக ஸம்ப்ரதாயத்தில் ஸம்ப்ரதிபந்நம். காரியாரும் அவர் பத்நி உடையநங்கையாரும் திருக்குறுங்குடியில் நம்பியை ஸேவித்து ஸந்தாநம் வேண்ட, நம்பியும், 'நாமே உம்மிடம் வந்து பிறக்கிறோம்' என்று வரப்ரதாநம் பண்ணி, நம்மாழ்வாராக அவதரித்தார் என்று ஸம்ப்ரதாயம். 'நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை' என்கிற பாசுரத்தின் பகுதியை வ்யாக்யாநம் செய்யுமிடத்தில், ஈடு முப்பத்தாறுயிரத்தில், 'உடைய நங்கையார் நம்பியை ஆச்ரயித்து ஆழ்வாரைத் திருவயிறு வாய்த்தார் என்று ப்ரஸித்தமிறே' என்று அருளியது இங்கு அநுஸந்தேயம்.

> "[illegible] ।
> [illegible] ॥"

என்பதாகத் திவ்யஸூரி சரித்ரத்திலும் காணப்படுகிறது. திருக்குறுங்குடிதான் ஸித்தாச்ரமம் என்றும் வாமநபுரீ என்றும் புராணாதி ப்ரஸித்தம். '[illegible]' என்று கைஶிகபுராணம். 'முன்பு நீரும் நாமும் குறுங்குடியாகக் கட்டியிருந்த ஆச்ரமத்திலே' என்பதாகப் பட்டர்படி. '[illegible]' என்று நம்பியை வாமநபுரீவராகத் திவ்யஸூரி சரிதம் சொல்லிற்று. ஆகவே வாமந நம்பி தானே மாறனாக அபிநவாவதாரம் செய்தானென்று தெளிவாகிறது. 'தென்குருகூர் நம்பி என்றக்கால்' என்றும், 'குருகூர் நம்பி' என்றும் 'வண்குருகூர் நகர் நம்பிக்கு' என்றும், இவ்வாறாக மதுரகவிகள் பாட்டுகள் தோறும் பெரும்பாலும் நம்பி என்றே ஆழ்வாரை அநுஸந்தாநம் செய்தது, ஆழ்வார் நம்பியின் அபிநவாவதாரம் என்பதை உட்கொண்டே போலும். மூன்று அடிகளில் மோஹம் கொண்ட ஒற்றுமையும், வாமநாவதாரத்திற்கும் பராங்குஶாவதாரத்திற்குமே யுள்ளது. அர்ச்சா ஸமாதியிலும் அபிநவ வாமநனே யென நின்ற நிலையை இவ்வாழ்வாரிடமே திவ்யதேசங்கள்தோறும் ஸேவிக்கிறோம். ஓங்கி யுலகளந்த உத்தமனாய் நின்றது பூர்வாவதாரம். மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோ னாயிற்று இவ்வவதாரம். உருவத்தில் மாறனாய்த் தாநம் விலக்கிய சுக்ரனிடம், ஶடகோபனாய், பலியினிடம் பராங்குஶனாய் நிற்கும் ஸாரூப்யமானது பூர்வமே அமைந்தது.

மீநமும் பொய்கை முநியும்

இனி பூர்வோத்தரங்களான அவதாரங்களுக்கு ப்ரத்யேக முள்ள ஸாலக்ஷண்யத்தை அநுபவிப்போம்.

த்ரமிட தேசாதிபதியான ஸத்யவ்ரதனென்பான் ஓர் அரசன்; அவனுடைய க்ஷேத்ரத்திலே ஜலத்திலே மீந ரூபியின் அவதாரம் என்று ஸ்ரீ பாகவதம் கூறுகிறது.

> "[illegible] ।
> [illegible] ॥" [8 ஸ்க. 24 அத்.]

இத்யாதியாக மத்ஸ்யாவதார வ்ருத்தாந்த முள்ளது. பொய்கை முனியும் த்ரமிட தேசத்திலே ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திலே பொய்கையில் அவதாரம் பெற்றிருப்பது சிறந்ததோர் ஸாரூப்யமாகும். மேலும் ஸத்யவ்ரதன் மத்ஸ்யத்தைத் தனது கமண்டலு ஜலத்தில் வைத்து ரக்ஷிக்க, அது ஒரு ராத்ரியில் வ்ருத்தியடைந்து இடம் பெருமல் அம்மத்ஸ்யம் நெருக்குண்டதாகப் பூர்வாவதார சரிதம்.

“ ஸா தஂ தஸ்தை கமண்டலவ் உத்பாநா கவணுமுள ।
கமுஸ்யாத்ராவகாஶா ஸா உதாஹரஹீவதிழ ॥ ”

அபிநவத்தில், இருளதனில் தண்கோவ லிடைகழிச் சென்று இருவருடன் நிற்கவு மாலிடை நெருக்குண்டு ஸாரூப்யம் பெற்றது.

‘ அஜ்ஞாநக்ரந்திபேதாய ஹரவாஸதோவஸி: ஸ்ரீந்நு ஹரதயாநு ’

என்ற ஸத்யவ்ரதன் ப்ரார்த்தனைக்கு இணங்கி அவன் மனத்திருள் செக ஞான விளக்கேற்றியது பூர்வாவதாரம். இவ்வவதாரத்திலும்,

‘வருத்தும் புறவிருள் மாற்றவெம் பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி யொன்றத்
திரித்தன் றெரித்த திருவிளக்கை’

ஏற்றியது பொருத்தமாயுள்ளது. ‘திருவிளக்காபென வையந்தகளி நூறும் செழும்பொருளை எனக்கருள்செய்’ என்ற ப்ரபந்தஸாரப் பாசுரம் மத்ஸ்ய ரூபியிடம் ஸத்யவ்ரதனுடைய ப்ரார்த்தனையை நினைப்பூட்டுகிறது. இப்படி ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் அவதாரமும், இரவில் இடை நெருக்குண்டபடியும், அவதாரங்களில் ஆதியானமையும், ஞானவிளக் கேற்றியதுமான ஒற்றுமையை உட்கொண்டு, அபிநவ மத்ஸ்யாவதாரமாகப் பொய்கை முனியை ஆசார்யன் அநுஸந்தித்தார் என்பது அதிஶயோக்தியாகாது.

கூர்மமும் பூதத்தாரும்

அபிநவ தஶாவதாரத்தில் இரண்டாவது அவதாரமாகிருர் பூதத்தார். முந்திய தஶாவதாரத்தில் இரண்டாவதான கூர்மாவதாரமாக இவரை ஆசார்யன் கொள்கிருர். ‘கூர்மோ வை பூதம் ஸ்ருஜதே’ என்பதாக வேதமானது கூர்மத்தைப் பூதமென வழங்கிற்று. இது இரண்டாவது அபிநவாவதாரத்தை ஸூசநம் செய்யாநின்றது போலும்.

“ ஸர்வேஷு தேஶேஷு ஸதேஷு தேஷு தேஷு கலௌ ஸமஹா: ।
கநாத்யவிஶ்ய கலௌ தே பஞ்சீஹிதலமத்ய: ॥ ”

என்கிற ப்ரமாணத்தைக்கொண்டு ஆழ்வார்கள் பகவதவதார மென்பதை குருபரம்பராஸாரத்திலே ஆசார்யன் ஸ்தாபநம் செய்தருளுகிருர். இதில் ‘பூதேஷு’ என்கிற நிர்த்தேஶம் பூதத்தாழ்வாரிடம் விஶேஷ நிர்த்தேசமாகவும் சேருகிறது. ‘ருஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோநுதாவதி’. லௌகிகரான பெரியோர் அர்த்தத்தை மனஸ்ஸில் எண்ணி அதற்கு வாசகமான வார்த்

தையை உபயோகிப்பர். மஹர்ஷிகளின் சொல்லை அர்த்தம் தானே தொடரும் என்பது இதன் பொருள். 'அகில' என்று ஸ்ரீபாஷ்யாரம்பம். இதில் அகாரமானது பகவத்வாசியாக ப்ரயோகம் பெறவில்லையாகிலும், பகவானைச் சொல்லும் ஶக்தி இதற்குண்டு. ஆகவே இது மாங்களிகம் என்றார் ச்ருத ப்ரகாஶிகையில். உதாஹ்ருத ச்ருதி ஸ்ம்ருதிகளில் பூத ஶப்தமானது பூதத்தாழ்வாரைப் போதிக்கும் ஶக்தி பெற்றிருப்பது மறுக்க வொண்ணாததே. திருப்பாற்கடலும் திருக்கடன்மல்லையுமாய்க் கடற்கிடந்த சேர்க்கையும் இவ்வவதார த்வயத்துக்கும் பொருந்தியுள்ளது. ஸமுத்ர மதநத்தில் தேவாதிகளோடு நெருக்குண்டது பூர்வம். இடைகழியில் நெருக்குண்டது அபிநவத்தில். 'நள்ளிருளில் மால்நெருக்க நந்தாஞானச் சுடர்விளக்கேற்றிய' அவதாரமாயிற்று இது.

மஹாவராஹமும் பேயாழ்வாரும்

மஹாவராஹத்தின் அபிநவாவதாரமா யிருப்பர் பேயாழ்வார். பார் வண்ண மடமங்கை பித்தரானது பூர்வாவதாரத்திலே. 'பேயரே யெனக்கி யாவரும் யானுமோர் பேயனே யெவர்க்கும்' என்று அத்தன்மையையே நிரூபகமாகக் கொண்டது அபிநவத்திலே. 'மஹாவராஹஸ்ஸ்புடபத்மலோசந:,' 'மஹாவராஹ தம்ஷ்ட்ராக்ர மஹீகோமலயா ஸ்ப்ருஹயா', 'மஹதே வைஷ்ணவே நம:,' 'மஹாவேத்ராய' என்று இவ்வாருக 'மஹான்' என்பதாகப் பூர்வாவதாரச் சிறப்பு. இவ்வவதாரமும் 'மஹதாஹ்வய' என்று அநுஸந்திக்கப் பெற்றது.

நரசிங்கனும் மழிசையர் கோனும்

'ஸுதர்ஷவ அஹோ தஸ்த்ராஸீத்ஸ்வத்வீபவதீமஹீ' என்று ஹிரண்ய பாலிதமான இடமானது மஹீஸார க்ஷேத்ர மென்பதாக ஸ்ரீ பாகவதத்திலே யுள்ளது. இவ்வவதார த்வயமும் மஹீஸார க்ஷேத்ரத்திலே யாயிற்று. ஸ்தூணத்திலே பூர்வாவதாரம். ஸ்தூணத்திலே (பிரப்பம் புதரிலே) அபிநவாவதாரம். அவதாரங்கள் இரண்டும் ஸ்தம்பத்திலேயாய்த் தலைக்கட்டிற்று. பெரும்புலியூரிலே 'சுரக்ஷா நாம்வீஹீணாம் நவநிஹிதம்' என்கிற ச்ருதியின் பொருளைக் கறுப்பு நெல்லை நகத்தினால் பிளந்து குறிப்பாய்க் காட்டியருளியது அபிநவ தஶையில். இது பூர்வாவதாரத்தில் நகத்தினால் செய்த ஹிரண்ய ஸம்ஹாரத்தையும் ஸூசநம் செய்தருளியபடி. 'ஸஜ்ஜமூர்த்யா தாம் ஹநிஷ்யாம்' என்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ந்ருஸிம்ஹாவதாரத்தை ஸூசநம் செய்தருளினான் என்பதாக அபயப்ரதாநஸாரம். உக்தியால் ஸூசநம் அங்கு. க்ரியையினால் ஸூசநம் இங்கு.

யாக ஸதஸ்ஸில் அக்ரபூஜையை அதிக்ஷேபம் செய்த ருத்விக்குகளுக்கு உக்ரமாய்ப் பீஷணமான சோதி ரூபத்தை வெளியிட்டருளினதை 'மழிசை வந்த சோதி' என்று விளக்கினர் ஆசார்யன். உக்ர னென்றும், பீஷண னென்றும், சோதி ரூபி யென்றும், ம்ருத்யுவிற்கும் ம்ருத்யு வென்றும் பூர்வாவதாரத்தின் சிறப்பு அம்மந்த்ரத்தில் உள்ளது. அபிநவத்திலே அந்த நிலை ஸூசிதமாயிற்று. மந்த்ரராஜபத ஸ்தோத்ரத்தைக்கொண்டு பூர்வாவதாரத்தை ஸ்தோத்ரம் செய்

தான் ருத்ரன். அவன்தானே இவ்வவதாரத்தின் பெருமையைப் பலபடியாகக் கண்டு 'பக்திஸாரர்' என்று திருநாமமிட்டுக் கொண்டாடினன். இவ்வாருன ஸாரூப்யம் பொருந்தியுள்ளது இவ்வவதார த்வயத்திலும்

பரசுராமனும் குலசேகரனும்

இனி: பராங்குசனுக்குப் பிந்திய அவதாரங்களின் பொருத்தத்தைப் பகர்வோம். பூர்வோத்தராவதாரங்களில் ஆருவது பரசுராமனும் குலசேகரனும். பரசுராம க்ஷேத்ரமாகிய கேரள தேசத்திலே அபிநவாவதாரம். அவதார த்வயமும் புநர்வஸு நக்ஷத்ரத்திலேயே யாயிற்று. க்ஷேத்ரமும் நக்ஷத்ரமும் அவதார க்ரமமும் ஒற்றுமை வாய்ந்துள்ளன இவ்விரண்டிற்கும். 'வி[illegible] [illegible]' என்கிறபடியே பூர்வம் கையும் வில்லுமானவோபாதி, அபிநவத்திலும் உபவீதமும் வில்லுமாய் க்ஷத்ரிய தர்மத்திலே நின்றபடி. '[illegible]' என்று வைரமானது பக்தியாய் மாறியது பூர்வம். "[illegible]" என்கிற படியே பக்தி ரஸமாக மாறியது வீரம்.

"[illegible] ।
[illegible] ॥"

என்று அங்குரிதமான ராமபக்தியே அபிநவத்தில் அதே யாத்ரையாய் நிற்கும் நிலையில் பரிணமம் பெற்றதுபோலும்.

ஸ்ரீராமனும் பெரியாழ்வாரும்

அவதார தசகங்கள் இரண்டிலும் முறையே ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனும் பெரியாழ்வாரும் ஏழாவது அவதாரமாவர். ஸ்ரீ ரங்கநாதனைக் குலதனமாகக் கொண்டு ஆராதநம் செய்தருளியது இவ்வவதார த்வயத்திற்கும் ஒக்கும். அபிநவத்தில் கிழி யறுத்தும் பூர்வத்தில் வில்லிறுத்தும் பரதத்வ நிர்த்தாரணம் செய்தபடியும் இவ்விரண்டுக்கும் ஒத்திருக்கும். அவைதான் முறையே பாண்டிய ராஜன் ஸபையிலும் விதேஹ ராஜன் ஸபையிலுமா யமைந்தன. கிழி வித்யாசுல்கம்; வில் வீர்ய சுல்கம். வில்லிறுத்ததனல் பரதத்வ நிர்த்தாரணம் செய்தபடியை,

"[illegible] ।
[illegible] ॥"

என்பதால் பரசுராமன் வெளியிட்டான். விஷ்ண்வவதாரத்தில்போலே ஸ்ரீ ராமாவதாரத்திலும் சிவ தநுர்ப்பங்கமாகிய நிமித்தம் ஒத்திட்டிருந்தது. நைமித்திகமான பரத்வ நிர்த்தாரணமும் தன்னேற்றமாய்ப் பலித்தது. வைஷ்ணவ தநுர்க்ரஹணத்தினும் பரத்வ நிர்த்தாரணம் செய்தபடியும் பரசுராமனல் விளக்கமாயிற்று.

“ ஸக்ஷயம் உய-ஹஞாஸம் ஜா நாஶிவ்ரா ஸ-ரொத்ரெழ ।
ய ந-ஷொஉஸ்யூவஶாஉஶ-ாக ”

என்று பரத்வ நிர்த்தாரணம் பண்ணினன் பரசு முனிவன்.

பலராமனும் தொண்டரடிப்பொடிகளும்

எட்டாவது அவதாரங்களான நம்பி மூத்தபிரானுக்கும் தொண்டரடிப் பொடி யாழ்வாருக்கு முள்ள ஸாத்ருச்யத்தைக் கவனிப்போம். ஸஷ்ரொ வெஷ்ணவஸாஉ யஉநஞம் ஷூஅக்ஷிதெ । ஶஹெ-ாஸஹஸ்வ ஶெவகூூா:’ என்றும் ‘ ஶெவகூூா ஜ௦ஶெ ஶஹ-௦ ஶெஷாவஷூ௦ யாஉஉாஉகுழ’ என்றும், வைஷ்ணவாம்ஸம் பெற்ற ஶேஷாவதாரம் என்பதாக ஸ்ரீ பாகவதத்தி லுள்ளது. ‘ஸர்வவித கைங்கர்யங்களையும் ஸர்வவித ஶரீரங்களாலே அநுபவித்து ஶேஷத்வமே தனக்கு நிரூபக மாகையாலே ஶேஷ னென்றே திருநாமமாம்படியான திருவனந்தாழ்வான்’ என்பதாக உபோத்காதாதிகாரத்திலே இவர் நிலையை விளக்கிக் காட்டினர் ஆசார்யன். ஶேஷத்வத்தையிட்டு ஶேஷனென்றே திருநாமம் பெற்றிருக்குமதை அடியொற்றி, ஶேஷத்வ காஷ்டையான தொண்டரடிப்பொடி என்றே நிரூபக நாமம் பெற்றிருப்பது அபிநவத்திற்குச் சிறப்பாகும். பூர்வம் கையும் கலப்பையுமாய் ‘ஸீரபாணி’ யென்றும் ‘ஹலாயுத’ னென்றும் பேர் பெற்றிருக்கும். அபிநவமும் நந்தவந கைங்கர்யத்திற்காக க்ருஷி ஸாதநங்களான கலப்பை முதலியவற்றை நிரூபகமாகக் கொண்டிருக்கும். இவை இவ்வவதாரங்களுக் குள்ள ஸாஜாத்யங்கள்.

கண்ணனும் பாணநாதனும்

தஶாவதார யுகளத்தில் நவமமான அவதாரங்கள் ஸ்ரீ க்ருஷ்ணனும் திருப்பாணாழ்வாரும். புதன்கிழமை கூடின ரோஹிணீ நக்ஷத்ரம் இவ்வவதார த்வயத்திற்கும் துல்யமா யமைந்தது. ‘குழற் கோவலர்’ என்கிறபடியே கோபர்க்குக் குழலூதுகை ஜாத்யுசித வ்ருத்தியாகையாலே, அந்த வ்ருத்தியிலே அதிகரித்துப் பலகாலும் குழலூதிக்கொண்டு போரும் பூர்வாவதாரம். அப்படியே, ‘பாட்டினல் கண்டு வாழும் பாணர்’ என்கிறபடியே மநஸ்ஸிலே ஸாவமும் வாக்கிலே ராகமும் கரத்திலே தந்த்ரியுமாக ஸாவ ராக தந்த்ரிகளால் அரங்கனைப் பாடி, அதுவே தாரக போஷக போக்யங்களாய், இதுவே யாத்ரையாய்ப் போரும் இவ்வவதாரமும். தேர்மேல் வீற்றிருந்து வேதார்த்த ஸாரத்தைக் கீதையினல் உலகுய்ய அருளியது பூர்வாவதாரத்திலே. அபிநவத்திலோ ‘லோகசாரங்க மாமுனி தோள்தனிலே வந்து பல மறையின் பொருளால் பாடித்தந்த சொல் அமலனதிபிரானலே’ உலகை உய்வித்தது.

கல்கியும் கலியனும்

பூர்வாவதார தஶகத்தில் கல்கியவதாரம் சரமமாயிருக்கும். அபிநவ தஶகத்தில் கலியன் அவதாரம் அத்தகையது. அபிநவ கல்கியே இவ்வவதாரம் என்பது உபபத்தி விஶேஷங்களாலே தெளிவாகின்றது. ஸ்வயம் சரமங்களாயிருக்கச்செய்தே சரமயுக நிஸ்தாரகங்களா யிருக்கு மிவை. பூர்வம்

கலிதவிர்த் தளிக்கும் கற்கி யானாற்போலே 'கல்கிர்த்வம்ஸ: கலே:' என்று அபிநவமும் கலிதவிர்த்தளிக்குமதாயிற்று.

" பவநே விஷ்ணுயஶஸ: கல்கி: ப்ராதுர்பவிஷ்யதி ।
அஶ்வமாஶுகமாருஹ்ய தேவதத்தம் ஜகத்பதி: ॥
அஸிநாஸாதுதமநமஷ்டைஶ்வர்யகுணாந்வித: ।
விசரந்நாஶுநா க்ஷோண்யாம் ஹயேநாப்ரதிமத்யுதி: ॥
ந்ருபலிங்கச்சதோ தஸ்யூந் கோடிஶோ நிஹநிஷ்யதி ॥ "

என்றிவ்வாறாக ஸ்ரீ பாகவதத்திலே கல்கியவதாரச் சிறப்புள்ளது. கல்கி அவதாரம் செய்து வேகவத்தான அச்வத்தின்மேல் ஏறிக் கையில் வாளேந்திப் பூமியிலுள்ள அஸாதுக்களை நிரஸித்துக் கலியைப் போக்கும். இவ்வவதாரமும ஆடல்மா என்கிற அச்வத்திலேறிக்கொண்டு வாளும் வேலுமேந்தித் துஷ்ட நிக்ரஹம் செய்தருளுமதாயிற்று. 'வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன்' என்று இவ்வவதாரச் சிறப்பைப் ப்ரபந்த ஸாரத்திலே சுருங்க வருளினார் ஆசார்யன்.

இவ்வாறாக இரண்டு அவதாரங்களுக்கும் ஸாத்ருச்யம் பஹுமுகமாய்க் காண்கையாலே, பின்னது அபிநவ தஶாவதாரமென்று நாமதேயமாயிற்று. ச்யேநம் (பருந்து) என்னும் பக்ஷியோடு துல்யமாயிருப்பதால் யாகவிஶேஷமொன்றை மீமாம்ஸகர்கள் ச்யேநம் என்றே நாமதேயம் கொண்டார்கள். தத்வ்யபதேஶ ந்யாயத்தாலே இப்பெயர்; அதாவது ச்யேநத்தோடு துல்யமாயிருத்தலால் ச்யேநம் என்கிற நாமமாயிற்று. அதே ந்யாயத்தினால் ஒவ்வொரு அவதாரத்திற்குமுள்ள ஸாத்ருச்யத்தைத் திருவுள்ளம்பற்றிப் 'பராங்குஶ பரகாலாதி ரூபத்தாலே அபிநவ தஶாவதாரம் பண்ணி உஜ்ஜீவித்தான் எம்பெருமான்' என்பதாகக் குருபரம்பராஸார ஸ்ரீ ஸூக்தியின் ஆஶயம் தோன்றுவதை ஸஹ்ருதய ஸந்நிதியில் விண்ணப்பம் செய்துகொண்டேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

மூன்றுவது அதிகரணமான 'ஶாஸ்த்ரயோநித்வ' ஸூத்ரத்தில் வேதாந்த ப்ரதிபாத்யமான முக்தப்ராப்ய பரப்ரஹ்மமென்னும் ஸர்வ காரணப்பொருள் மற்ற ப்ரமாணங்களால் ஸித்திக்காதென்பதையும், 'சுடர்மிகு சுருதி' யொன்றேதான் நமக்கு வேண்டிய ஸகல தாத்விகாம்ஶங்களையும் தெரிவிக்கக்கூடிய

தென்பதையும், இவ்வடியில் ப்ரஹ்மம் 'அயர்வறு மமரர்க ளதிபதி' என்று விஶேஷிப்பதால் விளக்குகிறுர். காரண மில்லாமல் கார்யங்கள் உண்டாக மாட்டா வென்று யுக்தியால் ஸாமாந்யமாக ஏதோ காரணங்கள் இப்ரபஞ்ச மென்னும் கார்யத்திற்கு இருக்கவேண்டு மென்று அநுமானித்தாலும், அக் காரணம் ஒன்றே; அது வேதாந்த ப்ரதிபாத்யமான உபாதாநத்வ நிமித்தத் வங்கள் இரண்டுங் கூடிய ஒரே காரணமென்று ஸித்திக்கமாட்டாது. ஒருகால் அப்படியும் ஸித்திக்கலா மென்ருலும்,

'ஸௌாயஶ்ரக்ஷ்: வஶதெவெத்ராஜநு யத்ரதெவா நாஜயிதெவ சூலெஷ'

'தத்விஷொ: வஶஜம் வதம்ஸஹாவஶந்ஹிஸஃமயஃ'

முதலிய ச்ருதிகள் அபூர்வமாகப் போதிக்கும் நித்யவிபூதி நாதனை, ஶேஷியாக, உடையவனுக, அதிபதியாக, உயிராக, நிரதிஶயாநந்தமாக ஶாச்வதமாய் அநு பவிப்பதே புருஷார்த்த மென்றும், ப்ரஹ்மம் அயர்வறு மமரர்க ளதிபதியாக ப்ராப்ய மென்றும், இவைபோன்ற ஸ்வரூப ஸ்வபாவங்களையுடைய வேதாந்த ப்ரதிபாத்ய பரப்ரஹ்மம் ப்ரத்யக்ஷத்தாலாவது அநுமாநத்தாலாவது ஸித்திக்க மாட்டாது; சுடர்மிகு சுருதி யொன்ருல்தான் இது ஸித்திக்கும். ப்ரஹ்மம் ஶாஸ்த்ர மென்னும் வேத ஶப்தைக யோநி என்றும் இங்கே மூன்ரு மடியில் மூன்ரு மதிகரண விஷயத்தை ஆழ்வார் விளக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது. 'ஶ்ருதிஶிரஸி விதீப்தெ ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸெ' என்று ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்தின் மூன்ரும் அடியில் ஆழ்வார் காட்டும் இந்த ரஸம் ஸூசிக்கப் பட்டது. அங்கே 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸெ' என்பதால்,

"வைகுண்டெ து பரெ லொகெ ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதிஃ ।

ஆஸ்தெ விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ"

என்ற ப்ரமாண வசநத்தை ஸூசித்து' ஆழ்வார் மூன்ரும் அடியில் காட்டிய அயர்வறு மமரர்க ளதிபதி ஸ்ரீநிவாஸ ப்ரஹ்ம மென்பதை ஸூசித்து, அந்த மூன்ரும் அடியைத் தாமும் அநுஸரித்தார். 'சுடர்மிகு சுருதியுள்' என்று இத்திருவாய்மொழியில் பாடியதே 'ஶ்ருதிஶிரஸிவிதீப்தெ' என்று குறிக்கப் பட்டது. அமரர்கள் என்று நித்ய முக்தர்களை இங்கே குறித்தது. ஸ்வர்க்க வாஸிகளான தேவர்களுக்கு அமரர்கள் என்கிற பெயர் முக்யமாகப் பொருந் தாது. 'தெவா நவெத்ரதி' என்றபடி மிக்க ஆயாஸமான சிரகால க்ரியைக ளால் ஸ்வர்க்கத்தை யடைந்து, அந்த அமரர்களோடு ஸாயுஜ்யம் பெற்ருலும் அவர்கள் பதமும் ஶாச்வத மல்ல; அவர்களும் ஶாச்வதமாக தேவபதம் வஹிப் பவ ரல்ல ரென்பதையும், அவ்வமரர்களுக்கு அதிபதியான இந்த்ர னென்கிற ரூட நாமத்தை (பேரை) மட்டும் வஹிப்பவனும், நூறு க்ரதுக்கள் பண்ணி தீர்க்க பஹ்வாவ்ருத்த க்லேஶ கர்மங்களைச் செய்து ஸாதிஶயமான ஓர் போலி உயர்வைப் பெற்று ஸ்வர்க்கத்தில் ஆதிபத்யம் செலுத்தும் இந்த்ரனைப்போன்றவ ரல்லர் இவ்வதிபதி யென்றும், இந்த்ராதிகளைப்போல் தாங்கள் பிறர்களுக்கு அதிபர்கள் என்றே நினைத்து ஶேஷித்வத்தையே டம்பமாய்ப் பாராட்டாமல்

ஸ்வத: நித்யமுக்த ஸம்ஸார்யாதி ஸகல சேதநாசேதநங்களுக்கும் நியத ஶேஷியும் அதிபதியும் உயிருமா யிருந்தும், அயர்வறு மமரர்களான தம் ஶேஷ வர்க்கங்களைத் தம் உயிர்போல் அபிமானித்துத் தமக்கு எள்ளளவேனும் குறைவில்லாமல் எல்லையற்ற ஆநந்தத்தை ஸதசமும் அநுக்ரஹித்துக் கொண்டே யிருக்கும் அதிபதியென்பதையும் விளக்குகிறார். ‘அயர்வறும்’ என்றதால், இந்த ஸூரிகள் தங்கள் அதிபதியான ப்ரஹ்மம் தங்களை ஶேஷிபோல் புரஸ் கரித்துக் கௌரவித்தாலும், தங்கள் ஶேஷத்வ மென்னும் உயிர்நிலையான ஸ்வ ரூபத்தை மறப்பதேயில்லை யென்பதையும், தங்கள் ஶேஷத்வ மென்னும் உயி ரைக் காத்தே ஆட்செய்வன் என்பதையும் விளக்குகிறார். ஶேஷத்வ ஸ்வரூபத்தை மறவாமல் ஸர்வ காலமும் அநுஸந்தித்துக்கொண்டு, ‘ஸ்வாமிநம் ஹி பரிசரணம் ஶேஷவ்ருத்தி:’ என்று கீதாபாஷ்யத்தில் ஸாதித்தபடி, நிரதிஶய இன்பத்தோடு ஶேஷியின் திருவுள்ளத்தின்படி அபேக்ஷித ஸர்வ பரிசர்யைகளையும் செய்வரென் பதைக் காட்டி, ஶேஷத்வத்தை மறக்காமல் அயர்வே யில்லாமல் உடும்புப் பிடியாய், யாவத் ஸ்வரூபாநுபந்தியாய், அப்ரச்யுதமாய்ப் பற்றியிருப்பது மோக்ஷத்திற்கு முக்ய ஸாதந மென்பதைக் காட்டி, ஸாதநாத்யாய விஷயங்களை யும் ஸங்க்ரஹிக்கிறார். யாவத்ப்ரயாணம் யாவதாயுஷம் அயர் வில்லாமல் அவிச்சிந்நமாய்ப் பக்தி யென்னும் ஸாதநத்தை அநுஷ்டிப்பது மோக்ஷ ஸாதந மென்பதையும் மூன்று மடியின் முதலிலேயே ‘அயர்வறும்’ என்பதால் ஸூசிக்கிறார். ‘பகவான் ஸித்தோபாயன்; ஸாத்யோபாயத்திலும் ஸித்தோ பாயனான பகவானே முக்யமான ஸாதநம்’ என்பதை ஸூசிப்பதற்காகவே ப்ரஹ்ம ஸ்வரூபத்தைப்பற்றி ஸாதநாத்யாயத்தில் உபய லிங்காத்யதிகரணங் களில் விசாரிக்கப்பட்டதென்றும் ஸூசிக்கிறார். ப்ரஹ்ம ஶப்தத்திற்கு அநவதிகாதிஶயமான புருஷோத்தமன்தான் பொருளென்று ஸ்ரீ பாஷ்யத்தில் ஸாதித்ததும், இந்த அடியில்,

‘கூடஸ்தோऽக்ஷர உச்யதே |’

‘யஸ்மாத்க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம: |
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ||’

என்று கீதையில் ஸாதித்தபடி, கூடஸ்தாக்ஷரரென்னும் நித்ய முக்தர்களைக் காட்டிலும் அதீதராய், நித்யவிபூதி யுட்பட லோகத்ரயத்தையும் அவ்யயமான ஈச்வரனாக உத்தம புருஷனாகப் பரித்து ஆள்கிறவர் என்று வர்ணித்ததையும், இவ்வடியில் ஸூசித்து அதைப் பின்பற்றுகிறார். ஸர்வ பந்த முக்தரான ஆத்மாக்களுக்கும் ப்ரஹ்மம் ஈச்வரனான அதிபதியேயொழிய, பிறர் சொல்வது போல் சுத்தாத்மாக்கள் ப்ரஹ்ம ஸ்வரூப மல்ல ரென்பதையும் தெளிவிக்கிறார். இந்தத் தெளிவில் ஒருகாலும் அயர்வு கூடாதென்று திருவுள்ளம்.

“நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம்
ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந் |
தமாத்மஸ்தம் யேऽநுபஶ்யந்தி தீரா:
தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் ||”

என்ற ச்ருதி இங்கே ஆழ்வார் திருவுள்ளத்தில் ஓடுகிறது. ஸூரிகள் அமரரென்னும் நித்யரே. அவர்களுக்கும் ஆத்மஸ்தராய் உயிராய் நியந்தாவாய் அதிபதியாய் ஶாச்வதப் பேரின்பத்தை 'பலமத உபபத்தே:' என்கிற ஸாதநாத்யாயத்தி லுள்ள பலாதிகரணத்தில் ஸாதித்தபடி ஸர்வ காலமும் அளித்துக்கொண்டு பரிப்பதால், 'முக்தியில் பகவான் அதிபதியே; மோக்ஷ இன்ப ப்ரதனே' என்ற ஸாதநாத்யாய விஷயங்களை இவ்வடியால் ஸூசிக்கிறார். 'அதிபன்' என்று கூறாமல், 'அதிபதி' என்று பணிப்பதால், 'அத ஏவ சாநந்யாதிபதி:' என்ற ஸூத்ரத்தையும் அதன் பொருளையும் ஸூசிக்கிறார். உடலாகிய இவனுக்கு உயிரான அதிபதியே; இவனிலும் அந்யனான வேறான அதிபதி யல்ல. இவனிலும் வேறென்று நினைக்கக்கூடிய அந்ய ராஜா வல்ல. பத்நிக்கு ப்ரியனான பதி போன்றவன், பத்ந்யதிகனான பத்நீ ஶேஷி. ப்ரியதமனும் வல்லபதமனுமான பதியானபடியால், 'ஸ ஸ்வராட் பவதி' என்று சொன்ன ஸ்வராஜகத்திற்குக் குறையில்லை என்பதையும் விளக்குகிறார். உடலான சைதந்யங்களுக்கும் ப்ரியதமமான உயிரான ப்ரஹ்மசைதந்யத்தின் ஆதிபத்யமெனும் ஶேஷித்வம் ப்ரியமாகவே யிருக்கும். உயிரான ப்ரஹ்ம சைதந்யத்திற் குள்ள ஸகல ஆநந்தமும் எள்ளளவேனும் குறைவில்லாமல் உடல் போன்ற சுத்தாத்மாவில் ஸர்வாத்மநா வ்யாபித்திருப்பதால், உடலுக்கும் உயிருக்கும் ஆநந்த மொன்றே யாகும். உடலை உயிர்தான் ரக்ஷிக்கும். ஆத்மாவான உயிர் உடல்களான முக்த ஜீவருக்கும் தம்மிலும் ப்ரியமாகவே இருக்கும். இந்த ஶேஷித்வம் ப்ரியதமையான பிராட்டியைக்குறித்தும் உள்ளதே. 'கோல மலர்ப் பாவைக் கன்பாகிய வென் னன்பேயோ' என்று கடைசித் திருவாய்மொழியின் ஏழாவது பாசுரத்தில் காட்டியபடி, பிராட்டியினிடம்போல் நித்ய முக்தர்களிடமும் வ்யாமோஹம் பண்ணிக்கொண்டு ஸ்த்ரீ ப்ராயரான அவர்களுக்கும் ப்ரியமான பதியாகையால், அவனுடைய அதிபதித்வம் போக்யதமமே யென்பதை ஸூசிக்கிறார். முதல் இரண்டடிகளிலும் 'யவனவன்' என்னும் பதங்கள், 'யத்ததத்ரேஶ்யமக்ராஹ்யம்' என்கிற முண்டக ச்ருதியில் போல 'யவன்' என்னும் பொருளைக் கொண்டன வென்ற யோஜனையும் காட்டப் பட்டுள்ளது. தமிழ் வேதமான ப்ரபந்தம் ச்ருதிச் சாயையாலேயே தொடங்குகிற தென்று ரஸம். இந்த மூன்று மடியில் 'யவன்' என்று தனியாய்க் கொண்டு, 'அவன்' என்பதைப் பின்னடியோடு சேர்த்துக்கொள்ளவேணும். ஸித்தோபாயனான பகவானுக்கு ஸாதநத்வத்தையும் ஶாஸ்த்ர ப்ரமாணகத்வத்தையும் விளக்கும் இந்த அடியில் அயர்வறு மமரர்களை ஶேஷத்வேந விஶேஷணமாகப் பணிப்பதும், நித்யஸூரிகள் ஸம்ஸாரிகளை உஜ்ஜீவநம் செய்விப்பதற்குப் பகவதிச்சாநுஸாரமாய் அவதரித்து, ப்ரபந்தங்களாலும் உபதேஶங்களாலும் ஜ்ஞாநத்தை யூட்டிக் கரையேற்றி ஸாதநகோடியில் சேருகிறார்களென்பதை விளக்குவதற்காக இங்கே விஷ்வக்ஸேநர் நினைவும் அவர் அம்ஶமென்று சொல்லும் ஆழ்வார் நினைவும் கிடைப்பதை முன்பே காட்டியுள்ளோம்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

நற்போது போக்கு

[ப்ருது சக்ரவர்த்தி சரித்ரம்]

[ஸ்ரீ. உப. K. ஸுந்தர்ஶநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

ஸ்வாயம்புவ மநுவின் குமாரனான த்ருவனுடைய வம்ஶத்தில் வேனன் என்றோர் அரசன் தோன்றினன். இந்த வேனன் என்பான், 'அங்கன்' என்னும் அரசனுக்கு ம்ருத்து புத்ரியாகிய ஸுநீதையினிடம் பிறந்தவன். இந்த வேனன், தனது மாதாமகனாகிய ம்ருத்துவினுடைய தோஷத்தினால் குண ஹீநனாய்ப் பால்யம் முதல் துஷ்ட ஸ்வபாவ முள்ளவனாகவே இருந்து வந்தான். யுக்த வயது வந்ததும் இவனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் நடைபெற்றது ராஜ்யாதிகாரம் வந்ததும், "யாரும் இன்று முதல் யஜ்ஞங்கள் பண்ண வேண்டாம்; ஹோமங்கள் செய்ய வேண்டாம்; தாநங்கள் கொடுக்க வேண்டாம்; நானே யஜ்ஞங்களுக்கு ஈச்வரன்: ஜகத் ப்ரபு நானே; வேறொருவரும் இல்லை" என்று நாடெங்கும் பறையறைவித்தான். இவ்விஷயம் முனிவர்களின் செவியிற் பட்டது. 'ஐயோ! இவன் ஹிரண்யகஶிபு போல் ஆரம்பித்து விட்டானே! ஸ்வபாவத்திலேயே இவன் துஷ்டன்; இவனுக்கு அதிகாரமும் கிடைத்து விட்டதே! ராஜ்யம் க்ஷீணித்து விடுமே! இவனை நல்லுபதேஶத்தால் நல்வழிப்படுத்துவோம்' என்ற எண்ணமுடையோராய், முனிவர்களெல்லாம் அந்த அரசனிடம் சென்று, "நரேந்த்ரனே! நாங்கள் கூறும் இவ்வார்த்தைகளைக் கேட்டருளவேண்டும்; நாட்டுக்கு நலனும் மக்களுக்கு மங்களமும் உண்டாகும்பொருட்டு நாங்கள் 'தீர்க்க ஸத்ரம்' என்னும் யாகத்தைச் செய்து யஜ்ஞேச்வரனான ஸ்ரீ ஹரியை ஆராதிக்கிறோம். அதனாலே உமக்கும் யஜ்ஞ பலத்தில் பங்கு கிடைக்கும். யஜ்ஞ புக்கும், யஜ்ஞ ஸாதநமுமான ஸ்ரீமந் நாராயணன் நாங்கள் செய்யும் வேள்விக் குகந்து உமக்கு ஸகலாபீஷ்டங்களையும் தந்தருள்வான். எவனுடைய ராஜ்யத்திலே யாகாதி ஸத்கர்மங்களால் யஜ்ஞேச்வரனான புருஷோத்தமன் பூஜிக்கப்படுவனோ, அந்த ராஜாவுக்கு அவ்வெம்பெருமான் ஸகல மநோரதங்களையும் அருள்வான். உமக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகும்" என்று ஸமாதாநமாகவும் மதுரமாகவும் சொன்னார்கள். ஈனர்க் குரைக்கும் உயர்மொழிகள் இடரிலன்றோ முடியும்! முனிவர்கள் சொன்ன மொழிகளை வேனன் கேட்டு முனிந்து, "முனிவர்காள்! என்னிலும் அதிகனும் ஆராத்யனுமான ஒருவன் உலகில் உளனோ? நீங்கள் சொன்ன யஜ்ஞேச்வரனான அந்த ஹரி யென்பான் யாவன்? ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர் என்றும் த்ரிமூர்த்திகளும், இந்த்ராதி தேவரும், ஶாபாநுக்ரஹ ஶக்தி வாய்ந்த மஹர்ஷிகளும் ஆகிய இவர்களெல்லாம் ராஜாவின் ஶரீரத்திலிருக்கிறார்கள். அரசன் ஸர்வ தேவ ஸ்வரூபி யென்று ஶாஸ்த்ரங்கள் முறையிடுவதை யறிந்து இக்கட்டளையை யான் பிறப்பித்தேன்; அதன்படி நடவுங்கள்;

இனித் தான தர்மங்கள் வேண்டாம்; யஜ்ஞயாகாதி க்ரதுக்கள் வேண்டாம்; ஸ்த்ரீகளுக்குப் பர்த்ரு ஶுச்ரூஷை எப்படி முக்யமோ, அதுபோல் அரசனாகிய என்னுடைய ஆஜ்ஞையை அநுஸரிப்பதே உங்கட்குப் பரமதர்மம்'' என்று கூறினான்.

வேனன் சொன்னதைக் கேட்டார்கள் முனிவர்கள். "தனக்கு க்ஷேமம் தரும் நமது நன்மொழிகளை இவன் இவ்வாறு புறக்கணிக்கிறானே! பின்னும் சொல்லிப் பார்ப்போம்'' என்று மறுபடியும், "அரசர்களுட் சிறந்தவனே! யஜ்ஞங்கள் செய்வதற்கு எங்கட்கு அநுஜ்ஞை கொடும்; தர்மத்தை நாஶம் பண்ணாதிரும்; சராசராத்மகமான ப்ரபஞ்சமெல்லாம் யஜ்ஞங்களிலே ஹோமம் செய்கிற ஹவிஸ்ஸால் வளர்ந்துவருகின்றன. ஆதலின் யஜ்ஞம் செய்ய எங்கட்கு உத்தரவளியும்'' என்று மிக்க வணக்கத்துடன் வெகு விதமாக அவனை ப்ரார்த்தித்தார்கள். எவ்வளவு கேட்டுக்கொண்டும் வேனன் அதற்கு இணங்காமை கண்டு, முனிவர்கள் முனிவு கொண்டு "இவன் ஆத்யந்த ரஹிதனும் ஜகத் ப்ரபுவுமான ச்ரிய:பதியை நிந்தித்தானல்லவா? இத்தகைய நராதமன் ராஜ்ய பரிபாலனத்துக்குத் தக்கவனல்லன்; இந்தப் பாபியைக் கொல்லுங்கள்; இவன் ஆததாயி; இவனைக் கொல்வதனால் நமக்குப் பாபம் வாராது'' என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, மந்த்ரங்களாலே சுத்தி செய்யப்பட்டிருந்த குஶ தர்ப்பைகளால் வேனவரசனை அடித்தார்கள். அவர்களுடைய தர்ப்பையால் அடிபட்டமாத்ரத்தில் வேனன் ப்ராணன் போய்க் கீழே விழுந்தான்.

இது இப்படியிருக்க: திடீரென்று அவ்விடத்தில் தூள் படலம் கிளம்பி ஆகாஶமெங்கும் சூழ்ந்துகொண்டது. முனிவர்கள் அதன் காரணத்தை அறிய விரும்பி ஜனங்களைக் கேட்க, அவர்கள் சொல்லுகிறார்கள்:—"முனிவர்களே! உங்களாலே பூமண்டலம் அராஜகமாயிற்று; அநேக ஜனங்கள் திரளாய்க் கூடி அங்கங்கே ப்ரவேஶித்துப் பிறருடைய பொருள்களைக் களவாட வேகமாய் வருகிறார்கள். அக்கள்வர்களின் கால்கள் பட்ட வேகத்தால் உண்டான தூள் படலங்கள் இவை'' என்று அதன் காரணத்தை வெளியிட்டார்கள். அதைக் கேட்ட அம்முனிவர் தம்முள் ஆலோசித்து, அரசாட்சிக்குரிய ஒரு புத்ரனை உண்டாக்க வேண்டுமென்று, அபுத்ரனான அந்த வேனனுடைய தொடையைக் கடைந்தார்கள். அப்போது அதிலிருந்து எரிந்த கட்டைபோல், கறுத்த நிறமும் விகார முகமும் குட்டையான உடலுமுடைய ஒரு மனிதன் தோன்றி, "முனிவர்களே! நான் என்ன செய்ய வேண்டும்?'' என்றான். அதற்கு அவர்கள் "அப்பா! [நிஷீத] உட்கார்'' என்றனர். அது காரணமாக அவன் 'நிஷாதன்' என்னும் பெயரை அடைந்தான். இவன் பரம்பரையில் வந்தவர்களே நிஷாதர்கள் (வேடர்கள்) எனப்படுவர். வேனவரசனின் பாபமெல்லாம் திரண்டு ஒரு புருஷ வடிவமாகப் பிறந்தது. அன்று முதல் நிஷாத ஜாதி உலகத்திலே உண்டாயிற்று.

பின்னர் அம்மஹர்ஷிகள் வேனனுடைய வலக் கையைக் கடைந்து அக்நி உண்டாக்கி, அதில் சதுர்முகனைக் குறித்து யாகம் செய்தனர். அப்போது அந்தக் கையிலிருந்து அக்நி போல் ஜ்வலிக்கிற தேஜஸ்ஸோடும், மஹா ப்ரதாபத்

தோடும் கூடிய ஒரு புத்ரன் உதித்தான். ப்ருது சக்ரவர்த்தி என்று அவனுக்குப் பெயர் உண்டாயிற்று. அவன் பிறந்தவுடன் ஆகாசத்திலிருந்து 'அசகவம்' என்கிற முதல் வில்லும், மற்றும் சில பாணங்களும் கவசமும் விழுந்தன. அவன் அவைகளைக் கைக்கொண்டான். இவன் பிறந்ததனால் ஸர்வ பூதங்களும் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்தன. மஹா ப்ரபாவமுள்ள இந்த ஸத்புத்ரன் உண்டானதினாலே, வேனன் 'புத்' என்னும் நரகத்திலிருந்து நீங்கி ஸ்வர்க்கம் புகுந்தான். அப்போது சதுர்முக ப்ரஹ்மா தேவகணங்கள் புடை சூழ நிலவுலகத்துக்கு எழுந்தருளி வேன புத்ரனை ப்ருதுவுக்குப் பட்டாபிஷேகம் செய்தார். அந்த ஸமயத்தில் நான்முகக் கடவுள் ப்ருது சக்ரவர்த்தியின் வலக்கையில் சக்ரரேகை காணப்படுவது கண்டு, 'இவன் நாராயணாம்சம்' என்று நினைத்து மகிழ்ச்சிகொண்டார். ப்ருது மஹாராஜன் மநு நீதி தவறாது அரசாட்சி செய்துவருங் காலத்தில், வேனன் காலத்தில் நலிந்து மெலிந்த ப்ரஜைகள் யாவரும் மிக்க ஸந்தோஷ மடைந்தார்கள். அவனி பாலனை ப்ருது, தேரேறி வெளிச் செல்லுங்காலத்தில், கடல்கள் ஓசையடங்கி நிற்கும். மலைகள் அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கும். பூமி உழாமலே விளையும். நினைத்த மாத்ரத்தில் மரங்கள் பழுத்துப் பழங்களை அளிக்கும். பசுக்கள் ஸம்ருத்தியான பால் தரும்.

ப்ரஹ்மாவைக்குறித்து முனிவர் செய்த யாகத்தினின்றும் ப்ருது சக்ரவர்த்தி பிறந்ததும், அவ்யாகத் தீயினின்று ஸூத ரென்றும் மாகத ரென்றும் இருவர் தோன்றினர். இந்த ஸூதமாகதர்கள், அரசர்களுக்கு ஊக்கமும் சூரத்வமும் உண்டாகும்பொருட்டுத் துதிபாடகராக ஏற்படுத்தப்பட்ட ஒரு வகை ஜாதியார். முனிவர்கள் அவ்விருவரையும் ப்ருது சக்ரவர்த்தின் குணங்களைச் சொல்லித் துதிக்க ஆஜ்ஞாபித்து, அவனது குணநலங்களைச் சுருக்கமாக அவர்களிடம் தெரிவித்தனர். அப்போது மஹா குணசாலியான ப்ருது ராஜன் "என்ன பாக்யம் பெற்றேன்! லோகத்தில் ஸத்குணங்களால் ஒருவனுக்குப் புகழ் உண்டாகிறது; இந்த ருஷிகள் இவர்களைக் கொண்டு என்னைத் துதிக்கச் சொன்னது, ஸத்குணங்களை நான தெரிந்துகொள்ளும்பொருட் டன்றோ? எனக்கு இயற்கையில் ஸத்குணங்கள் உண்டோ இல்லையோ அறிகிலேன்; இவர்கள் கூறும துதி மொழிகளை ஓர் உபதேசமாகக்கொண்டு ஸத்குணங்களை க்ரஹித்துத் துர்க்குணங்களை த்யஜிக்கிறேன்" என்று அவைகளைக் கேட்க ஸித்தமாயிருந்தான்.

அப்போது ஸூதமாகதர் அந்த ராஜகுமாரனை, "இந்த ராஜகுமாரன் ஸத்யவாதி; தாந சீலன்; ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவல்லவன்; அகார்யம் செய்வதில் வெட்கப்படுகிறவன்; பொறுமையுடையவன்; ஸ்நேஹ குண முள்ளவன்; மஹா ப்ரதாபவான்; துஷ்டர்களை சிக்ஷிக்கும் தன்மை யுடையவன்; இன்மொழியை யுடையவன்; பெரியோர்களைப் பூஜிப்பவன்; ப்ராஹ்மண பக்தியிற் சிறந்தவன்; வ்யவஹார விஷயங்களில் நிஷ்பக்ஷபாதத் தன்மையுடையவன்" என்றிவ்விதம் ஸுஸ்வரத்தோடு நன்றாய்ப் பாடித் துதித்தார்கள். இவர்களது துதிமொழிகளை ராஜகுமாரன் உள்ளத்திற் கொண்டு

ஸகல கல்யாண குணகரனாய் விளங்கிப் பூமண்டலத்தைப் பரிபாலநம் பண்ணிக் கொண்டுவந்தான்.

ப்ருது சகரவர்த்தி அரசாட்சி செய்துகொண்டு வருங்காலத்தில் ஒரு நாள் ப்ரஜைகள் யாவரும் அவனை அணுகி, "ப்ரபோ! உமது அரசாட்சிக்கு முன்னர் இப்பூமி அராஜகமா யிருந்தது. அப்போது இந்தப் பூமி ஸகல ஓஷதி வர்க்கங்களையும் தனக்குள்ளே இழுத்துக்கொண்டது. ஆதலால் யாங்கள் இப்போது உணவின்றி வருந்துகிறோம். க்ஷுத் பாதையால் நலியும் எங்கட்கு ஓஷதி வர்க்கங்களை மீட்டுக் கொடுத்து எங்களை ரக்ஷிக்கவேண்டும்" என்று முறையிட்டுக்கொண்டனர். அதுகேட்ட இறைவன், 'நன்று; அவ்வாறே செய்கிறேன்' என்று சொல்லி ப்ரஜைகளை விடை கொடுத்தனுப்பி அசகவம் என்னும் வில்லையும் மற்றும் திவ்ய பாணங்களையும் எடுத்துக்கொண்டு பூமியின் மேற் சீறி வந்தான். அப்போது பூமிதேவி பசுவின் ரூபத்தைத் தரித்துக் கொண்டு பயந்தோடினாள். அந்த மன்னனும் அவளை விடாது தொடர்ந் தேகினான். தரணீதேவி ப்ரஹ்ம லோகம் முதலிய அநேக லோகங்களிலும் ஓடிப்பார்த்தும், தன்னைக் காப்பாற்றுவார் ஒருவரையும் காணாதவளாய், தநுர்த் தரனாய்த் தன் பின்னே வருகிற மஹா பராக்ரமஶாலியான ப்ருது ராஜனைப் பார்த்துப் பயத்தினால் தளர்ச்சியுற்று, ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்து, "மஹீபாலனே! பெண்வதை பெரும் பாதக மென் றறிந்தும் என்னை வதைக்க இத்தகைய முயற்சி கொண்டனையே! இம்முயற்சியை விடு விடு" என்று வேண்டினாள். அப்போது அவர்களுக்குள் இவ்வித பேச்சுகள் நிகழ்ந்தன.

ப்ருது—வஸுந்தரே! துஷ்ட கார்யம் செய்கிற ஒருவனை வதைத்தலி னால் வெகு ஜநங்களுக்கு நன்மை உண்டாகுமானால், அப்படிப்பட்ட வதை யினால் புண்ய முண்டாகுமே யல்லது பாவ முண்டாகாதே!

பூதேவி—அரசர் தலைவ! நான் ஸர்வ பூதங்களுக்கும் ஆதாரமானவள். ப்ரஜைகளுக்கு ஹிதம் உண்டாகும்பொருட்டு என்னை ஸம்ஹரிப்பாயானால் ஸமஸ்த பூதங்களுக்கும் ஆதார மென்ன?

ப்ருது—என்னுடைய ஆஜ்ஞையை அதிலங்கநம் செய்து துர்விநீதை யாய் நடந்துவரும் உன்னை எனது தீக்ஷ்ணமான பாண ஜாலங்களால் எய்து கொன்று பின் என் யோக பலத்தால் ஸகல ப்ரஜைகளையும் தரிக்கிறேன்.

[பூமிதேவி இவ்வார்த்தையைக் கேட்டுப் பயத்தினால் நடுங்கிப்போய் அவ்வரசனை வணங்கிக் கூறுகிறாள்.]

பூமிதேவி—"அப்பா! ராஜச்ரேஷ்ட! நான் ஓர் உபாயம் சொல்லு கிறேன்; உபாயத்தால் ஆகாதது ஒன்று மில்லை. அதைக் கேளும். உலகில் உள்ள ஸகல ஓஷதி வர்க்கங்களும் என்னுள் அடங்கியிருக்கின்றன வென்பது மெய்யே. இப்போது அவை க்ஷீர ரூபமாக என்னிடம் இருக்கின்றன. வேண்டுமானால் லோக ஹிதத்துக்காகப் பால் உருவம் கொண்டுள்ள அவ் வோஷதி வகைகளைக் கொடுக்கிறேன். எனக்கு ஒரு கன்றை நீர் உண்டாக் கிக் கொடும். அக்கன்றினிடம் உண்டாகும் வாத்ஸல்யத்தால் க்ஷீர ரூபமாக

189265

உள்ள அவ்வோஷதி வர்க்கங்களைக் கறக்கச் செய்கிறேன். நான் கொடுக்கும் பால் உலகெல்லாம் பரவும்பொருட்டு, மேடு பள்ளங்களுடன் விஷமமாயிருக்கும் மலைகளை யெல்லாம் விலக்கி, பூமி ஸமமாக இருக்கும்படி அதை நிரவும்" என்றாள்.

ப்ருது சக்ரவர்த்தி பூமிதேவி சொன்னபடி நூறாயிரங்கோடி பர்வதங்களை யெல்லாம் தனது வில்லின் நுனியால் அப்பால் தள்ளிப் பூமண்டலத்தை ஸமமாகச் செய்தான்.

பின் ப்ருது அரசன் ஸ்வாயம்புவ மநுவைக் கன்றாக வைத்து, தனது கையைப் பாத்ரமாகச் செய்து தேநு ரூபமாயுள்ள பூமிதேவியினிடமிருந்து ஸகல ஸஸ்யங்களையும் [பயிர் முதலிய ஓஷதி வர்க்கங்களையும்] கறந்தான். அதனால் ப்ரஜைகள் ஸந்தோஷ மடைந்து, அவன் உண்டாக்கின ஆஹாரத்தினால் பலமும் ஶக்தியும் வாய்ந்தவர்களாய் ஸுகித்திருந்தார்கள். அவன் கொடுத்த அந்நமே இப்பொழுதும் ப்ரஜைகளால் அநுபவிக்கப்பட்டு வருகிறது. அந்த ப்ருது மஹா ராஜன் பூமிக்கு ப்ராணனைக் கொடுத்ததனாலே அவன் அதற்குப் பிதாவானான். அந்தக் காரணத்தால் பூமிக்கு ப்ருதிவீ என்ற பெயர் உண்டாயிற்று.

பூர்வ காலத்தில் மலைகள் முழுதும் நெருங்கிப் பரவியிருந்ததனாலும், பூமண்டலம் மேடு பள்ளங்களால் நிறைந்திருந்ததனாலும், புரங்கள் க்ராமங்கள் முதலியன பூமியில் இல்லாமலேயிருந்தனவாம். பயிர்த் தொழில், கோ ரக்ஷணம், வ்யாபாரங்கள் முதலியனவும் இல்லையாம். ப்ருது ராஜன் ராஜ்யாபிஷிக்தனானது முதல் இவ்வேற்பாடுகள் உலகில் உண்டான தன்றி, எங்கெங்கே பூமி மேடு பள்ளங்கள் இல்லாமலிருக்குமோ அங்கங்கே இவ்வரசன் பட்டணங்களையும் க்ராமங்களையும் நிர்மித்து ஜநங்களை வஸிக்கச் செய்தானாம். முன்னர் கந்த மூல பலாதிகளே ஜநங்களுக்கு ஆஹாரமாக இருந்தனவாம். ப்ருது சக்ரவர்த்தியின் ஆட்சிக்குப் பிறகு எம்பெருமானின் திருவடித் தாமரையிற் பிறந்த ஸ்ரீ பூமிதேவி உலகில் உள்ள ஸகல பூதங்களுக்கும் வேண்டிய ஸகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்ற ஏற்பட்டாள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மனித வாழ்க்கையின் லக்ஷ்யம்

[வேதாந்த சிரோமணி ஸ்ரீ. உப தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி]

உலகத்தில் ஒவ்வொரு ஜந்துவும் தன் தனக்கெனவே கார்யங்கள் செய்யக் காண்கிறோம். தன் ஸுகத்திற்கும் தன் உபயோகத்திற்குமே ஒவ்வொருவனும் தன் தன் வேலைகளில் முயல்கிறான். பிறருக்காகக் கார்யம் செய்கிறவர்களிடத்தும், முடிவில் அவர்களின் லக்ஷ்யம் தம் உபயோகத்திலே இருக்கும். த்யாகிகளும்கூடப் பரோபகாரம் செய்வது, 'அது ஸ்வதர்மம்' என்ற எண்ணத்துடனேயோ, பகவத் ப்ரீதிக்காகவோ, அல்லது அது ஸ்வயம் ப்ரயோஜநம் என்ற எண்ணத்துடனேயோ ஆகும். ஆகவே, பிறர்களுக்காகவே

வாழ்கின்றவர்களின் வாழ்க்கையிலும், தன்னுடைய லக்ஷயம் என்று ஒன்று மறைந்துகிடக்கின்றது. அவ்வித லக்ஷயம் ஒன்றை மனத்தில் வைத்துக் கொண்டேதான் எல்லோரும் கார்யம் செய்கிறார்கள். இந்த லக்ஷயத்துடன் செல்லும்போது அவர்களின் கார்யத்தில் பரோபகாரம் கலந்தால் அவர்களைப் பரோபகாரி என்கிறோம். அபகாரம் நேர்ந்தால் நிந்திக்கிறோம். இவர்களெல்லோரும் ஒரே லக்ஷயத்துடன் கார்யம் செய்கிறவர்களாயிருந்தாலும், படிப்பின் குறைவாலும் பயிற்சியின் தோஷத்தாலும் சிலருடைய கார்யத்தில் அபகாரம் கலக்கின்றது. தங்கள் லக்ஷயத்தை ஸாவதாநமாகச் சீர்திருத்திக் கவனித்துக்கொண்டு கார்யம் செய்கிறவர்களிடத்தில் அபகாரமே யிருக்க மாட்டாது. பரோபகாரமும் நிறைந்திருக்கும்.

இப்படிப்பட்ட உயர்ந்த லக்ஷயத்தை ஒவ்வொரு மனிதனும் பூர்த்தி செய்துகொள்ள முற்படவேண்டும். லக்ஷயம் ஒன்றாக இருக்க, அதற்கு விரோதமாகக் கார்யம் செய்தால், அந்த லக்ஷயம் என்றைக்குப் பூர்த்தியாகும்? இதை ஒரு சிறு கதையின் மூலம் விளக்குவோம்.

தென்னாட்டில் ஒரூரில் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் நல்ல செல்வாக்கும் எல்லோரும் வாழவேண்டு மென்ற தர்மசிந்தையு முள்ளவர். அவருக்கு ஒரே பிள்ளை. அவன் பெயர் ஸுமதி. அவனுக்கு நல்ல படிப்பைப் புகட்ட வெண்ணி அவர் அவனைக் காசிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். பிள்ளையும் அதற்கு ஸம்மதித்தான். அந்த நாட்களில் சீக்ரமாக ப்ரயாணம் செல்வதற்குரிய வஸதிக ளில்லை. அதனால் அவர் தம் பிள்ளைக்கு நல்ல குதிரை வண்டி யொன்றை வாங்கி, நல்ல வண்டிக்காரனையும் அமர்த்தி, மற்றும் வேண்டிய வஸதிகளுடன், ஒரு நல்ல நாளில் பிள்ளையை வண்டியி லேற்றித் தம் உத்தேசத்தையும் பிள்ளைக்கு நன்றாகப் போதித்து, லக்ஷயம் தவறாமல் கார்யம் விரைவில் நடைபெறவேண்டு மென்றும் வற்புறுத்தி அனுப்பினார். வண்டியும் கிளம்பிக் கொஞ்சதூரம் சென்றது. பாதையின் பக்கத்தில் ஒரு நாடகைக் கொட்டகை தென்பட்டது. அதன் வாசலில் நாடகக் காட்சிகளை யறிவிக்கும் பலவித வர்ணப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஜனங்களை ஆகர்ஷிக்க வாத்ய கோஷமும் பலமாயிருந்தது. ஜனத்திரளின் காரணமாக ஸுமதியின் வண்டி அங்கு நிற்கவேண்டி வந்தது. உடனே அவன் கீழே இறங்கினான். 'நாமும் கொஞ்சம் பார்த்துவிட்டுச் செல்லலாமே' என்றெண்ணி உள்ளே சென்று நாடகம் பார்த்தான்; களித்தான். வெகுநேரம் சென்றுவிட்டது. இது அவனுக்குத் தெரியவில்லை. திரும்பி வண்டியி லேறிக் கொண்டான். வண்டி மெதுவாகச் சென்றுகொண் டிருந்தது. கொஞ்ச தூரத்தில் பாதை இரண்டாகப் பிரிந்து காணப்பட்டது. இடது புறம் மற்றொரு சாலை தென்பட்டது. வண்டிக்காரன் எது தன்னுடைய வழி என்பதை விசாரியாமல் அக்கிளைப் பாதையில் வண்டியைத் திருப்பினான். அவ்வழியில் இரண்டு மைல்கள் சென்றதும், அவ்வழி குதிரைவண்டி செல்லத்தகாதபடி சிறு பாதையாக மாறிவிட்டது. இதை இவர்கள் கவனிக்காமல் வண்டியைச் செலுத்தவே, குதிரையின் கால்கள் அடிபட்டும் வண்டியின் ஒரு பாகம் முறிந்தும் போயின.

அதனால் அங்குத் தங்க நேர்ந்தது. அங்கு ஒரு சிற்றூரில் இவன் சில நாள் தங்கி, வண்டியையும் குதிரையையும் சீர்படுத்திக்கொண்டு மறுபடி புறப்பட்டான். ஆனால் தான் போகவேண்டிய இடத்தை அறவே மறந்து, வழிகளில் பற்பல விநோத ஸ்தானங்களில் பல காட்சிகளைக் கண்டு பொழுதுபோக்கிக் கொண்டு, பஞ்சேந்த்ரியங்களையும் அவற்றின் வழியே விட்டு அவைகளை த்ருப்தி செய்துவைத்தான். இப்படியாகப் பல நாட்கள் சென்றன. ஆயினும் சுற்றிச் சுற்றித் திக்குத் தெரியாமலும் லக்ஷ்யத்தை மறந்தும் தென்னாட்டிற்கே திரும்பி வந்து, தன் பிதாவின் ஊருக்குச் சமீபம் வந்து சேர்ந்தான். ஸுமதி மிகவும் இளைத்துப்போனான். பணமும் செலவாகிவிட்டது. ஸாரதிக்கும் சக்தி குன்றி விட்டது. வண்டியும் இனி ப்ரயாணத்திற்கு அநுகூலமில்லாதபடி உடைந்தே போய்விட்டது. இந்த விஷயங்களை ஸாவதாநமாக அவ்வப்போது அறிந்து வந்த அவன் பிதா உடனே அங்கு வந்து ஸுமதியைத் தேற்றி, வேறு நல்ல வண்டியையும் தந்து ஸாரதியையும் ஸ்வஸ்தமாக்கி ஸுமதியை மறுபடி ப்ரயாணப்படுத்தி அனுப்பினான். இந்தத் தடவையிலும் ஸுமதி முன்போலவே அலைந்து திரிந்து வீணாக வந்து சேர்ந்தான். இவ்வாறு பல தடவைகளிலும் லக்ஷ்யம் கைகூடாமல் அவன் ஆதரவற்று நிற்க நேர்ந்தது. பிதாவும் அவ்வப் பொழுது சலிப்பில்லாமல் தக்க உதவிசெய்தும் ஸமீசீநமான உபதேசங்கள் செய்தும் உதவ, கடைசியாக ஸுமதிக்கு வழியில் காசிக்குப்போக நல்ல ஸகாக்கள் நேர்ந்து, அவர்கள் உதவியால் காசிக்குப் போய் ஸுமதி நல்ல படிப்பைப் பெற்று இன்புற்றிருந்தான்.

இக்கதையால் நாம் அறிவது என்னவென்றால்:—ஒவ்வொரு மனிதனும் தன் லக்ஷ்யத்தைச் செவ்வையாக உணராமல் அதற்கு மாறாகக் கார்யம் செய்து அதன் பயனாகக் கஷ்டப்படுகிறானென்றும், தன் லக்ஷ்யத்தை நன்குணர்ந்தவன் இத்தகைய கஷ்டங்களுக் குள்ளாகாமல் வெகு விரைவிலேயே லக்ஷ்யத்திற்கு அநுகுணமாகக் கார்யங்கள் செய்து க்ஷேமப்படுகிறானென்றும் நிச்சிதமாகிறது. இப்படி தன் உயர்ந்த லக்ஷ்யத்தைத் தவறவிடுவது பெரும்பாலும் தத்வ ஜ்ஞாநத்தின் குறைவால்தான். 'எவ்வஸ்து தனக்கு எம்மட்டில் உபயோகப்படுகிறது? எம்மட்டில் அது தனக்கு விரோதம் செய்கிறது?' என்ற உண்மையைச் செவ்வையாய் அறிந்துகொள்ளாமையே இதற்கு முக்ய காரணம். இதற்காகவே நல்ல படிப்பும் நல்லவர்களின் சேர்க்கையும் அவச்யம். 'ஸாவித்யாயாவிமுக்தயே' எது கஷ்டத்தில் அழுந்திக்கிடக்குமவனை முற்றிலும் விடுவிக்குமோ அதுதான் வித்யை; மற்றது, 'வித்யாந்யாஶில்பநைபுணம்'—சில்ப சாதுர்யத்திற்கே யல்லது கஷ்டங்களைத் தீர்க்காது. ஆனால் மனிதர்களிலும் பெரும்பான்மையோர் முன் ஜந்மத்தில் செய்த கர்மங்களின் வாஸனையின் பயனாக இதை உணர்ந்துகொள்ள ஶக்தியற்றிருக்கிறார்கள். 'மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததி ஸித்தயே'—ஆயிரத்தில் ஒருவனே நல்ல படிப்பாலும் பயிற்சியாலும் தன் லக்ஷ்யத்தை உணர முன்வருவான். ஆதியில் அவர்களுக்கு ஶரீரத்தையும் இந்த்ரியங்களையும் புத்தியையும் ஸாராஸார விவேசந சக்தியையும் நல்வழி பார்த்து நடப்பதற்கு ஶாஸ்த்ரத்தையும் கொடுத்த ஈச்வர

னுடைய எண்ணத்தின்படியல்லவோ இவர்களின் இறுதி லக்ஷ்யம் இருப்பது பொருத்தமானது ? அதாவது : அந்த ஸர்வேச்வரனுடன் தனக்குண்டான ஸம்பந்தத்தை யுணர்ந்து அவனைக் கிட்டுவதற்கு இடையூறான ஸம்ஸார துக்கங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு, அவனை நெருங்கிப் பரிபூர்ணமாக அநுபவித்து இன்புற்றிருப்பதேயாகும். இதை நன்குணர்ந்தவன் அந்த லக்ஷ்யத்திற்கு தக்க ப்ரயத்நம் செய்யாமலிருக்கமாட்டான்.

ஸ்ரீ:

ஸ்ரீஉதெ ஞுகூீ நரவிஂஹவஸஊஹணெ நஉஃ

செய்திகள்

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபை, மதுராந்தகம்

ஷை ஸபையின் விசேஷக் கூட்ட மொன்று, 18—9—49 ஞாயிற்றுக்கிழமை யன்று பகல் இரண்டு மணிக்குக் கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்தில் ஷை கலாசாலை கௌரவாத்யக்ஷர் ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி M.A., L.T., தலைமையில் கூடிற்று. அப்பொழுது இவ்வர்ஷத்து ஷை ஸபா கார்ய நிர்வாஹத்திற்காக, வீ. நரஸிம்மன், வி. டி. லக்ஷ்மீநரஸிம்மன் என்னும் இருவர் கார்யதர்சிகளாகவும், ஓ. என். க்ருஷ்ணன், எஸ். ரங்கநாதன், பி. ஸி. சடகோபன் ஆகிய இம்மூவர் ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஷை ஸபையானது மீண்டும் 28—9—49 புதன்கிழமை யன்று காலை 7-30 மணிக்குக் கலாசாலை கௌரவாத்யக்ஷர் ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி M.A., L.T., தலைமையில், ஸ்ரீ அஹோபில மடம் முதலாவது பட்டம் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ரத்தின் பொருட்டு முதலாவதாக் கூடிற்று. அப்பொழுது அத்யக்ஷ ஸ்வாமியால் 'ஆசார்யகுண வைபவம்' என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. பிறகு ஷை விஷயத்தைப்பற்றி ப்ரவசக கர்த்தாக்கள் உபந்யஸித்தார்கள்.

பின்னர் ஷை ஸபை 15—10—49 சனிக்கிழமை மாலை 4-30 மணிக்குக் கலாசாலை வைஸ் பிரின்ஸிபால் ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உப. M. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஆத்யக்ஷ்யத்தில் கூடிற்று. அப்பொழுது T. பார்த்தஸாரதியால் 'உஜ்ஜெ ந ஹிஸிஊஹீ காயஹாணி ந உநொநஸெஃ' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு ஸம்ஸ்க்ருத உபந்யாஸம் எழுதி வாசிக்கப்பட்டது.

வீ. நரஸிம்மன்,
வி. டி. லக்ஷ்மீ நரஸிம்மன்,
[கார்யதர்சிகள்.]

* * * * * *

ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய ஸபா, மாதுங்கா, பம்பாய்.

ஷை ஸபையோரால் பம்பாய்—மாதுங்காவில் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், தேசகாலாநுஸாரியாகப் பத்து தினங்கள் வேதபாராயண திவ்யப்ரபந்த பாராயண ஆசார்ய ஸம்பாவநாதிகளுடன் விசேஷ வைபவத்துடன் கொண்டாடப்பட்டது. இடையே கேட்டைத் திருநன்னாளில் 'எத்திசையும் நம்முடைய இன்னுருவாம் பாக்கியமாய் உற்றமுனி' யாகிய ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரத் திருவிழவும்

சிறப்புறக் கொண்டாடப்பட்டது. இவ்விடம் லௌகிகத்தில் பெரிய பதவி வஹிப்பவர்கள் உட்பட ஆஸ்திகர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளாகக் கூடி ஆசார்யோத்தமர்களுடைய உத்ஸவங்களில் பக்தியுடன் அந்வயித்து, அவற்றைப் பரிமளிக்கும்படி செய்தது ஸ்ரீ சரண்யனுடையவும் ஆசார்யர்களுடையவுமான திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பா யிருக்கு மென்பதில் ஒருவித ஸந்தேஹமு மில்லை.

இவ்வர்ஷம் இந்த உத்ஸவங்கள் விசேஷமாகக் கொண்டாடப்படுவதற்கு ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் பூர்வாச்ரம திருக்குமாரரான ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி விஜயராகவாசார்ய ஸ்வாமி மிகுந்த உத்ஸாஹத்துடன் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியைத்தான் முக்ய காரணமாகச் சொல்லவேண்டும். ஸமீப காலத்தில் இந்த ஸ்வாமி இவ்விடமுள்ள ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான மார்வாடி ப்ரபுக்களைக் கண்டு அவர்கள் நேரில் உத்ஸவங்களை ஸேவித்து ரஸிக்கும்படி செய்து உத்ஸவங்களுக்கும் ஸபைக்கும் விசேஷமான த்ரவ்ய ஸஹாயம் செய்யும்படி புருஷகாரம் செய்தது மிகுந்த தொரு உபகார விசேஷம். இம்மாதிரியான உத்ஸவ விசேஷங்கள், எல்லோராலும் எல்லா ஊர்களிலும் ஒரு விதமான ப்ரதிபந்தகமு மில்லாமல் இன்னும் அதிகமான உத்ஸாஹத்துடன் கொண்டாடப்பட்டு, ஸர்வலோக ஹிதைஷிணியான நம் ராமாநுஜ ஸித்தாந்தம் தழைத்தோங்கும்படியாக ஸ்ரீ சரண்யன் ஸங்கல்பித்தருள வேண்டும்.

ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்.

* * * * * *

திருக்குடந்தையில் ஸ்ரீமங்கிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ரோத்ஸவம்

திருக்குடந்தையில் ப்ரபலமாக விளங்கும் ஸ்ரீ வேதபாராயண ஸபையின் ஆதரவில் ஸ்ரீமங்கிகமாந்த மஹா தேசிகன் திருவவதாரோத்ஸவ வைபவம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. ஐயங்கார் வீதியிலுள்ள பம்பாய் ஸ்ரீ. உப. C S. ஸௌந்தராசார்ய ஸ்வாமியினுடைய திருமாளிகையான 'ஸ்ரீராம விலாஸ' மந்திரத்தில் புரட்டாசித் திருவோணத்தன்று உபக்ரமித்து, வேத ப்ரபந்த பாராயணங்களும் ஸ்ரீ தேசிக க்ரந்த பாராயணங்களும் விசேஷமாக நடந்தன. உள்ளூர் வெளியூர் ஸ்வாமிகள் சுமார் நூறு பேர் வரையில் இந்தக் கைங்கர்யத்தில் அந்வயித்தார்கள் ப்ரதிதினமும் விசேஷ ததீயாராதநமும் நடந்தது. வைதிக லௌகிக ப்ரமுகர்கள் பலர் வந்து கோஷ்டியை ஸேவித்தனர்.

ஏழாவது தினத்தில் சாத்துமறையும் வித்வத் ஸம்பாவநாதிகளும் விசேஷமாக நடந்தன. ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் திவான் பஹதூர் ஸ்ரீ உப. S. ராகவையங்கார் ஸ்வாமியின் தலைமையில் பெரிய ஸதஸ் ஒன்று கூடியது. அப்போது அங்கு ஸ்ரீ. உப. N. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி, மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. K.S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, தேவனூர் விளாகம் ஸ்ரீ. உப. வீரராகவாசார்ய ஸ்வாமி முதலாக ஸுமார் இரு நூறு பேர்கள் எழுந்தருளியிருந்தார்கள். ஆசுகவி வில்லூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி 'ஆசார்ய மஹிமை' என்பது பற்றியும், அக்நிஹோத்ரம் ஸ்ரீ. உப. ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமி 'அர்ச்சாவதார நிலைமை' என்பது பற்றியும் உபந்யஸித்தனர். ஸ்ரீ. உப. N. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி பேசுகையில், ஆலயங்களில் தைவ ஸாந்நித்யம் போய்விட்டதை ஒப்புக்கொண்டும் கூட, அங்குக் கைங்கர்யம் செய்ய முயற்சிப்பதாகச் சிலர் வாதிப்பதைக் கண்டித்து, ஸாந்நித்ய மில்லாத இடங்களில் கைங்கர்ய சப்தம் எப்படிப் பொருந்து மென்று எடுத்துக் காட்டி, இனி ஆசார்ய உத்ஸவங்கள் இந்த ரீதியிலேயே நடப்பதுதான் உசிதமென்று ஸாதித்தார். ஸ்ரீ. உப. K. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ஸம்ப்ரதாய ஐகமத்யம் பற்றியும் அதன் அபிவ்ருத்தி பற்றியும் பேசியருளினார். திவான் பஹதூர் ஸ்ரீ. S. ராகவையங்கார் ஸ்வாமி இந்த உத்ஸவத்தை அபிநந்தநம் செய்து, பல ஊர்களிலும் இம்மாதிரி உத்ஸவங்கள் நடத்தப்படவேண்டு மென்று

வேண்டினர். பொதுவாக இந்த உத்ஸவத்திற்கு விசேஷமாக உபகரித்த ஸ்ரீ. உப. பம்பாய் C. S. ஸுந்தராசார்யருடைய ஸம்ப்ரதாய ச்ரத்தையையும் உதாரத் தன்மையையும் பற்றி எல்லாருமே பாராட்டினர்கள். நூறு ஸ்வாமிகளுக்கு வித்வத் ஸம்பாவனை செய்யப்பட்டது. கார்யதர்சி ஸ்ரீ. உப. என். சடகோபாசார்ய ஸ்வாமி இந்த உத்ஸவ விஷயம்பற்றி அறிக்கை ஒன்று வாசித்தார். நடாதூர் ஸ்ரீ. உப. 'குலபதி' க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் யாவருக்கும் வந்தநோபசாரம் கூறப்பட்டது. ஷை உத்ஸவத்தில் ப்ரதி தினமும் இரவில் பகவத் கதா ப்ரவசநங்களும் நடந்தன. தெம்பரை ஸ்ரீ. உப. வேங்கடவரதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. கோமல் சேஷாத்ரியாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. M. ராமராவ் இவர்களுடைய உபந்யாஸங்கள் ரஸமாயிருந்தன. ஸ்ரீமான் வாதிராஜ பாகவதர், 'ருக்மிணீ கல்யாணம்' ஹரிகதா ப்ரவசநம் செய்தார். திருவாதி காலேஜ் ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி 'ஸீதா கல்யாணம்' பற்றிப் பெருமையாக ப்ரவசநம் செய்தார். ஸங்கீத ஸாஹித்ய வல்லப ஸ்ரீ. உப. எம்பார் விஜய ராகவாசார்ய ஸ்வாமி கோஷ்டியார் 'ஸ்ரீ தேசிகன் வைபவம்' பற்றிப் பக்க வாத்யங்களுடன் ஹரிகதா ப்ரவசநம் செய்தது யாவரையும் பரவச மாக்கியது.

கநபாடி. N. சடகோபாசார்யர்,

[திருக்குடந்தை வேதபாராயண ஸபா கார்யதர்சி.]

* * * * * *

ஸ்ரீரங்கம் தஞ்சம்மாளின் நிர்யாணம்

சென்ற ஆவணி மீ. 28உ செவ்வாய்க்கிழமை ஸ்ரீரங்கம் 'ரங்க சரணத்தில்' தஞ்சம்மாள் என்ற உத்தமி ஆசார்யன் திருவடிகளை அடைந்தாள். அவள் அநேக வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் விருந்த கவர்ன்மெண்ட் வக்கீல் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸையங்கார் என்பவரின் ஜ்யேஷ்ட புத்ரி. ஜில்லா ஜட்ஜுகளாக இருந்து, இப்போது விராமத்தில் எழுந்தருளியிருக்கும் திவான் பஹதூர் ஸ்ரீ. ராகவையங்காருக்கும், திவான் பஹதூர் ஸ்ரீ. ராஜகோபாலையங்காருக்கும் ஜ்யேஷ்ட ஸஹோதரி. இந்த அம்மாள் ஸ்ரீ அஹோபில மடத்தின் சிஷ்யையாக இருந்தது மட்டுமன்றி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடையவும் அம்மடத்தினுடையவும் பல கைங்கர்யங்களில் ஈடுபட்டவள். மடத்தில் மூர்த்தாபிஷிக்தர்களான ஸ்ரீ அழகியசிங்கர்கள் அநேக வர்ஷங்கள் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில், அநேகமாய் ப்ரதிதினமும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகியசிங்கர்களையும் பக்தி ச்ரத்தையுடன் ஸேவித்து வந்தவள். ஆலயப் ப்ரவேசம் என்று சொல்லப்பட்ட சாஸ்த்ர விரோதமான நடவடிக்கைகள் ஏற்பட்ட காலம் வரையில், அவள் ப்ரதிதினமும் பகவத் ஸேவை இல்லாமல் இருந்ததில்லை. நம் பூர்வர்களுடைய ஸித்தாந்தத்தை அநுஸரித்துத் தன் பிற்காலத்தில் ஸ்ரீரங்கவாஸம் வேண்டுமென்று சென்ற ஐம்பது வர்ஷ காலமாய் அவள் அந்த க்ஷேத்ரத்திலேயே வஸித்துவந்தாள். அவள் தன் சிறு பிராயத்திலேயே வைதவ்யம் அடைய நேரிட்டது. அதுமுதற்கொண்டே ஜ்ஞாந பக்தி வைராக்ய ஸம்பாதநத்தை முக்யமாகக் கருதி, நம் ஸம்ப்ரதாயத்தில் ப்ரஸித்தர்களான அநேக ஆசார்யர்களிடத்தில் காலக்ஷேபம் கேட்டு, நம் ஸித்தாந்தத்தின் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக உணர்ந்தாள். அவ்வித ஆசார்யர்களில் முக்யமானவர்கள்:— ஸ்ரீ அழகியசிங்கர்கள், ஸ்ரீ. உப. கபிஸ்தலம் ஸ்வாமி, ஸ்ரீ உபய கோஷ்டிபுரம் ஸ்வாமி, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி போன்ற பெரியோர்கள். இந்த அம்மாள் ஸ்த்ரீகளுக்குரிய ஆஹ்நிக விதிகளைத் தவறாது அநுஷ்டித்து வந்தாள். தனது நெருங்கிய பந்துக்களுக்குத் தன்னால் இயன்ற வளவு உபகாரங்களைச் செய்து வந்ததோடு, பகவத் பாகவத கைங்கர்யங்களில் உத்ஸாஹத்தோடு ஈடுபட்டும் வந்தாள். இவள் அநேக தாந தர்மங்கள் செய்திருக்கிறாள். திருக்குறுங்குடி முதல் பதரிகாச்ரமம் வரையிலுள்ள எல்லா திவ்ய

தேஶங்களும் அவளால் ஸேவிக்கப்பட்டன. இந்த அம்மாள், ப்ராணவியோகம் ஏற்படும் வரையில் பகவந் நாமோச்சாரணம் செய்துவந்து, அந்திம ஸ்ம்ருதியுடன் தேஹ த்யாகம் செய்ததாக அருகிருந்து பார்த்தவர்கள் ஆச்சர்யத்துடன் சொல்லுகிறார்கள்.

வ. வே. ஸ்ரீநிவாஸையங்கார்.

*　*　*　*　*　*

ஆஸ்திக ஸபை, கோடம்பாக்கம் (சென்னை)

ஷை ஸபையின் ஆதரவில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 7-30-மணி முதல் 9-30-மணி வரை இவ்விடத்தில், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம், திருக்குடந்தை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமியால் உபந்யாஸம் செய்யப்பட்டு வருவது சென்னை வாஸிகளும் பிறரும் அறிந்ததே. அதில் குருபரம்பராஸாரம் முதல் ப்ரதாந ப்ரதி தந்த்ராதிகாரம்வரை முடிந்து, சென்ற மீ. அர்த்த பஞ்சகாதிகாரம் ஆரம்பம் செய்யப்பட் டிருக்கிறது. ஆஸ்திக மஹான்கள், இந்த உபந்யாஸத்துக்கு எழுந்தருளி ச்ரவணம் பண்ணி, ஸ்ரீ தேசிகனுடைய திவ்யாநுக்ரஹத்துக்குப் பாத்ரமாகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஸபை கார்யதர்சி.

*　*　*　*　*　*

ஸ்ரீ தேசிக ஸேவா ஸமிதி—சென்னை.

அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாய அபிவ்ருத்திக்காகப் பல விதங்களிலும் தொண்டு புரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஷை ஸமிதியார் கையாண்டு வரும் பல நவீன முறைகளுள் அருமையான தொன்றை இவ்வருடம் புரட்டாசி மாஸம் மயிலாப்பூரில் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதி ப்ரஹ்மோத்ஸவத்தின்போது பலர் கண்டு மகிழ்ந்தனர். தூண்களிலும், பந்தல்களின் கம்பங்களிலும், பலவித வர்ணங்களால் சித்ரமாகவும் விசித்ரமாகவும் அமைக்கப்பட்ட அட்டைகளிலும் பலகைகளிலும் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகளிலிருந்து அருமையான சிறு வாக்யங்களை எடுத்தெழுதிப் பலரும் கண்டு ஆநந்திக்கும்படி செய்திருந்தனர். அங்கே காணப்பட்ட வாக்யங்களில் சில பின் வருமவை:—

1. "தேசிகர் வாசகமே ஓலைப்புறத்தில் எழுதுகின்றோம் உள்ளே எழுதுமினே"
2. "நாராயணன் பரன்; நாமவனுக்கு நிலை யடியோம்"
3. "நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே"
4. "நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரமொன் றிலதே"
5. "வானேறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே"
6. "பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே"
7. "நாலாயிரமும் எங்கள் வாழ்வே"
8. "ஆளவந்தா ரடியோம் படியோ மினி யல்வழக்கே"
9. "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே"
10. "தொல் வழியே நல் வழிகள் துணிவார்கட்கே"
11. "திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோப னருளினாலே"
12. "[illegible]"
13. "[illegible]"
14. "[illegible]"
15. "[illegible]"
16. "[illegible]"

'ஒரொன்று தானே யமையாதோ' என்று பாசுரமிட்ட பெரியோரது வார்த்தையின் அருமை நன்கு உணரப்பட்டது. இந்த ஸமிதியார் பற்பல விடங்களில் ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளை இலவசப் பாடசாலைகள் நடத்திப் போதித்துவர ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள் என்று கேட்டு மகிழ்ச்சி யுறுகிறோம். ஷை ஸமிதியாரின் சார்பில் ஒரு புஸ்தக விற்பனை சாலையும், ஷை தேசிகன் உத்ஸவத்திலும் அதற்கடுத்த வாரத்தில் வெகு விமர்சையாய் நடந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் பவித்ரோத்ஸவத்திலும் வைக்கப்பட்டிருந்ததையும், அதைப் பலர் ஆதரித்துப் பல தேசிக ஸம்ப்ரதாய நூல்களை வாங்கினதையும் கண்டு, நமது ஸத்ஸம்ப்ரதாயம் தழைப்பதற்கு நல்லதொரு மார்க்கத்தை இவர்கள் அவலம்பிததிருக்கிறார்கள் என்று கண்டவர் அனைவரும் களி கூர்ந்தனர்.

ஒரு நிருபர்

*　　　*　　　*　　　*

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் வர்ஷாராதநம்

ஸ்ரீரங்கத்தில் ஷை ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ருந்தாவநத்தில் அந்த ஸ்ரீ அழகிய சிங்கரின் வர்ஷாராதந மஹோத்ஸவம் ஐந்து நாள் முந்தி உபக்ரமிக்கப்பட்டுத் திவ்யப்ரபந்த வேதபாராயணங்கள் நடந்து, ஐப்பசி மீ 10உ (26—10—49) ஷை மஹோத்ஸவம் இனிது நடந்தேறியது. பல ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தனர்.

ஸ்ரீரங்கம்,
26—10—49.　　　A. நரஸிம்ஹாசார்யர்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஞூ கார்த்திகை மீ [நவம்பர் – டிஸம்பர் 1949.]

[தக்ஷிணாயநம், சரத்ருது, வ்ருச்சிக மீ.]

16—11—49	1உ	புதன்கிழமை ...	வ்ருச்சிக க்ருஷ்ண ஏகாதசி திதி; ஸர்வ ஏகாதசி (வ்ரதம்); விஷ்ணுபதி
19—11—49	4உ	சனிக்கிழமை ...	சதுர்த்தசி திதி
20—11—49	5உ	ஞாயிற்றுக்கிழமை ...	ஸர்வ அமாவாஸ்யை; அமாவாஸ்யை—ப்ரதமை திதி த்வயம்.
24—11—49	9உ	வியாழக்கிழமை ...	ஸ்ரீ. அ. மடம் 34-ம் பட்டம் அத்திப்பட்டு ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
30—11—49	15உ	புதன்கிழமை ...	ஏகாதசி திதி
1—12—49	16உ	வியாழக்கிழமை ...	அதிதி; ஸர்வ ஏகாதசி (வ்ரதம்) (கைசிக ஏகாதசி)
2—12—49	17உ	வெள்ளிக்கிழமை ...	த்வாதசி திதி
4—12—49	19உ	ஞாயிற்றுக்கிழமை ...	ஸ்ரீ திருமங்கை மன்னன் திருநக்ஷத்ரம்
5—12—49	20உ	திங்கட்கிழமை ...	ஸர்வாலய தீபம்; ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்
14—12—49	29உ	புதன்கிழமை ...	நவமி - தசமி திதி த்வயம்
15—12—49	30உ	வியாழக்கிழமை ...	சாப க்ருஷ்ண ஏகாதசி திதி: சாப ரவி 29. 58 ஷடசீதி [இன்று சாப ஸங்க்ரமண தர்ப்பணம்]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

தர்ம சாஸ்த்ரமும் அரசாங்கச் சட்டங்களும்

நம் தேசத்தில் பூர்வகாலத்திய அரசர்களால் ராஜ்ய பரிபாலநம் ஆஸ்திக்யத்தையே அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டுவந்தது. ஆஸ்திக்யமாவது, "மேலுலகம் உண்டு; எல்லோராலும் காணப்படும் ஶரீராதிகளைக் காட்டிலும் வேறுபட்டதான ஆத்மா என்ற அழிவில்லாத வஸ்து உண்டு; அந்த ஆத்மா, தான் சரீரத்துடன் செய்யும் நன்மை தீமைகளுக்குள்ள பலன்களை அந்த ஶரீரத்திலுள்ள காலத்திலும் பிறகு பரலோகத்திலும் அநுபவிக்கும்" என்ற நம்பிக்கை. 'இது செய்யத் தகுந்தது' 'இது செய்யத் தகாதது' 'இது தர்மம்' 'இது அதர்மம்', 'இது ஹிதம்', 'இது அஹிதம்' என்ற வ்யவஸ்த்தைக்கு ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டு, அதன்படி முற்காலத்து அரசர்கள் நடந்து வந்தார்கள். அரசன் விஷ்ணுவின் அம்ஶம் என்று மதிக்கப்பட்டு வந்தாலும், அரசனுக்குத் தானாகவோ, அல்லது எண்ணிக்கையால் மட்டும் அதிகமான பல ஜநங்களின் ஸம்மதி பூர்வமாகவோ, தர்மத்தை மாற்ற அதிகாரம் இருந்ததில்லை. ச்ருதி ஸ்ம்ருதி விஹிதமான தர்மங்களையே ப்ரஜைகள் அநுஸரிக்கும்படி அவர்கள் செய்து வந்தார்கள்.

ஆங்கிலேயர்கள் கொஞ்சங் கொஞ்சமாக இந்நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கியபொழுது, அவர்களுக்கு நம் தர்ம சாஸ்த்ர விஷயங்களில் நம்பிக்கை யில்லாவிட்டாலும், அவைகளை உண்மை யென்று மதித்து நடப்பவர்களின் கார்யங்களில் நேரடியாகத் தலையிடாம லிருந்தார்கள். ப்ரஜைகளுக்கு ந்யாயம் வழங்கும்போது, அவரவர்கள் தர்மப்படி ந்யாயம் வழங்குவதாகவும் ப்ரகடநம் செய்துவந்தார்கள். பிறகு, நிர்வாஹ ஸபை, சட்ட ஸபை இவைகளின் உதவியுடன் ஸர்க்காரை அமைத்து நிர்வாஹம் நடத்த ஆரம்பிக்கப்பட்டது. சட்ட ஸபையோடு கூடிய அரசனுக்கு எந்த விஷயத்தைப் பற்றியும் எப்படி வேண்டுமானாலும் யாதொரு வரையறையு மின்றிச் சட்ட மியற்ற அதிகார முண்டு என்ற ஆங்கில அரசியல் கொள்கையைப் பின்பற்றி, நம் தேசத்திலும் சட்ட ஸபையுடன் கூடிய வைஸ்ராய்க்குப் பல விஷயங்களைப் பற்றிச் சட்ட மியற்ற அதிகார முண்டு என்று வைத்துக்கொண்டு, மேல்நாட்டு நாகரிகத்

அடன் பழகி அதனுலேற்பட்ட விபரீத வாஸனையால் நம் தேசத்தின் ப்ராசீந தர்மத்திலும் கலாசாரங்களிலும் பஹுமானம் குன்றியவர்களையே அதிகமாகக் கொண்ட சட்ட ஸபையின் உதவியால் அநாதிகாலமாக நடந்து வந்த நம் ஸமூஹ வாழ்க்கையின் பற்பல அம்ஸங்களை மாற்றும் வகையில் சட்ட மியற்றத் தொடங்கினுர்கள். 'மத விஷயங்களில் அரசாங்கம் தலையிடக் கூடாது' என்று பல ஆஸ்திகர்கள் ஆக்ஷேபித்ததை அரசாங்கத்தார் பொருட்படுத்தவில்லை. அது முதல் நம்முடைய மத தர்மங்களிலும் ஆசாராநுஷ்டாதிகளிலும் த்வேஷ புத்தியுள்ளவர்களும், அவைகளைத் தங்களுக்குத் தோன்றும் வகையில் சீர்திருத்தி யமைக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களும், சட்ட ஸபைகளைப் பயன் படுத்திக்கொண்டு தங்க ளிஷ்டப்படி சட்டங்களை இயற்றி வருகிறுர்கள். இந்த சட்டங்களில் பல ஆஸ்திகர்கள் மிகவும் புனிதமாகக் கருதிப் பின்பற்றிவரும் கார்யங்களை நிஷேதித்தும், அவர்கள் தர்ம ஸாஸ்த்ரப்படி நிஷித்தம் என்றும் ப்ரத்யவாயகரம் என்றும் கருதும் கார்யங்களைச் செய்யும்படி நிர்ப்பந்தித்தும் வருகின்றன. அந்யர்களின் ஆதிக்யம் ஒழிந்து தேசத்திற்கு ஸ்வாதந்த்ரியம் வந்த பிறகு இம்மாதிரியான விபரீதப் போக்கு நாளுக்கு நாள் இன்னும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. இது ஆஸ்திகர்களுக்கு மிகுந்த பீதியை உண்டுபண்ணி யிருக்கிறது.

'விஸேஷ விவாஹ மசோதா' என்ற ஒரு மசோதாவைச் சென்ற மாஸத்தில் மத்ய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கிறுர்கள். இம்மசோதாவின்படி 18-வயதிற்கு மேற்பட்ட புருஷனும், 15-வயதிற்கு மேற்பட்ட பெண்ணும் (சில குறிப்பிட்ட நெருங்கிய பாந்தவ்ய மில்லாம லிருந்தால்) ஜாதி, மத, குல, கோத்ர ப்ரவர வ்யவஸ்தை யாது மின்றிப் பரஸ்பரம் விவாஹம் செய்துகொள்ளலாம். ஸர்க்காரால் நியமிக்கப்படும் அதிகாரி ஒருவருக்கு முன்னதாக அறிவித்து விட்டு, பிறகு அவர் முன்பு ஆஜராகி, கணவனும் மனைவியுமாக ஆனவர்களாகப் பதிவு செய்துகொண்டுவிட்டால், அவர்கள் இருவரும் தம்பதிக ளாகிவிடுகிறுர்கள். வேறு மந்த்ரபூர்வமாக விவாஹம் வேண்டியதில்லை. இவர்களுக்குப் பிறக்கும் ஸந்ததி, தகப்பன் அல்லது தாய் இவர்களின் மதங்களில் எதையாவது ஒன்றைச் சார்ந்ததாக வளர்க்கப்பட வேண்டுமென்றும், அந்த மதஸ்தர்களுக்கு வழங்கிவரும் சட்ட முறைப்படி சொத்து முதலியவைகளை அடைய வேண்டு மென்றும், விவாஹ காலத்திலேயே அவர்கள் பத்திர மூலம் ஏற்பாடு செய்துகொள்ளலாம். இப்படிச் செய்துகொள்ளப்பட்ட விவாஹத்தை விவாஹ ரத்து சட்டப்படி தக்க காரணங்களிருந்தால் ரத்து செய்து கொள்ளலாம். 21-வயதிற்கு உட்பட்டவர்கள் தங்கள் தகப்பன் அல்லது கார்டியன் இவர்கள் ஸம்மதத்துடன்தான் இந்த சட்டப்படி விவாஹம் செய்துகொள்ளலாம். அகாரணமாய்க் கார்டியன் ஸம்மதி கொடுக்க மறுத்தால் கோர்ட் மூலம் ஸம்மதியைப் பெறலாம். 21-வயதிற்கு மேற்பட்டால் தகப்பன் முதலியவர்கள் ஆக்ஷேபித்தாலும் தங்க ளிஷ்டப்படியே இந்தச் சட்டத்தின் கீழ் விவாஹம் செய்துகொள்ளலாம். இன்னும் இப்படிப்பட்ட பல விசித்ர ஷரத்துகளைக் கொண்ட இம்மசோதா, விவாஹம் என்னும் புனிதமான கார்யத்தை எவ்வளவு

தாரம் உருத் தெரியாமல் குலைக்க முற்பட்டிருக்கிற தென்பதை யாவரும் எளி தில் உணரலாம்.

நம்முடைய தர்ம சாஸ்த்ரங்கள், விவாஹத்தைக் காமத்தைப் பூர்த்தி செய்யும் உபாயமாக மதியாமல், முக்யமாய் தர்மத்தை வளர்க்கும் ஸம்ஸ்கார மாகவே கருதுகின்றன. த்ரைவர்ணிகர்களுக்கு, விவாஹமானபிறகு அக்நி கார் யங்களான பல ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஶாஸ்த்ர முறைப்படி விவாஹம் செய்து வைக்கப்பட்ட தம்பதிகள் இருவருக் கும் சேர்ந்து அந்தக் கார்யங்களில் அதிகாரம். இப்படி விவாஹம் செய்து கொண்டு க்ருஹஸ்த தர்மத்தை அநுஷ்டிப்பவனை மற்றெல்லா ஆச்ரமத்தார்க ளும் அண்டி வாழ்க்கை நடத்த வேண்டியதை உத்தேசித்து, முக்யாச்ரமியாக வும் “வெணகாஹுஶ்ரூ்ம் ஙெவகெ ஶாஹ-ஃஹஃஸ்ஹ” என்று கௌதமாதிகள் புகழ் கிறார்கள். ஆகவே தர்ம ஶாஸ்த்ரங்களில் சொல்லியபடி வயது, குலம், கோத் ரம், ப்ரவரம் முதலிய நியமங்களுக் குட்பட்டு மந்த்ர பூர்வமாக விவாஹம் செய்து கொண்டால்தான் தாம்பத்யம் ஏற்படும். அப்பொழுதுதான் அவர் கள் பதியும் பத்நியும் ஆவார்கள். அப்படி விவாஹம் செய்து வைக்கப்பட்ட வர்களுக்கு உண்டாகும் குழந்தைக்கே புத்ரத்வம் உண்டு. வேறு விதமாக விவாஹம் செய்தால் அவர்களுக்குத் தாம்பத்யமும் அவர்கள் ஸந்ததிக்குப் புத்ரத்வமும் ஸித்திக்கமட்டா. ஆகையால் அவர்கள் செய்யும் கர்மாக்க ளெல் லாம் ஸபலங்க ளாகவும் ச்ரேயஸ்கரங்க ளாகவும் ஆகா. ஸர்க்கார் கொண்டு வந்திருக்கும் இம்மசோதா, விவாஹத்தின் புனிதத்தன்மையை மாற்றி அதை ஒரு வ்யாபார ஒப்பந்தம்போல் செய்து விடுகிறது.

இம்மசோதா சட்டமாக்கப்படுவதால் நம் ஸமூஹத்திற்கு எந்த விதத் தில் ச்ரேயஸ் உண்டாகுமென்று இவர்கள் நினைக்கிறார்கள் என்று விளங்க வில்லை. ‘ஹுாயொ நெதி ஶ்ரு-திவிஷயதா விஶ்ஶாய-யஃஹெத-ஃ’ என்று ஒரு மஹாகவி சொல்லியபடி, ச்ருதி ஸ்ம்ருதிகள் இம்மாதிரி கார்யங்களை நிஷேதித் திருப்பதே கலியின் மஹிமையால் இவைகளில் இவர்களுக்கு அபிருசி பிறப்ப தற்குக் காரணம் போலும்.

இம்மசோதாவைப் பற்றி பல லௌகிக ப்ரமுகர்களும் மதாசார்யர்க ளும் தங்களுடைய ஆக்ஷேபங்களை ஸர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றை ஏற்றுக்கொண்டு ஸர்க்கார் இம்மசோதாவைக் கைவிடுவர்க ளென்று நம்புகிறோம். மதம் என்பது மனிதனின் தனிப்பட்ட உரிமை யென் னும் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டு ராஜ்யபரிபாலநம் செய்யும் காங்க்ரஸ ஸர்க்கார், இம்மாதிரி விஷயங்களில் ஜநங்கள் தங்கள் தங்கள் ஆசாரப்படி நடந்துகொள்ளும்படி விட்டுவிடுவதுதான் உசிதம். இவ் வுண்மை ஸர்க்கார் மனத்தில் பதியும்படி செய்ய நமது ஆஸ்திகர்க ளனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சித்தால்தான் நமது மதாசாரங்களைப் பாதுகாக்க முடி யும். இது விஷயத்தில் ஶரண்யனே கதி.

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்

(1) ராமாயண முக்தாவளீ:—[ராமாயண ரத்நாகர சித்தூர் ஸ்ரீ. உப. T. ஸ்ரீநிவாஸராகவாசார்யர் தொகுத்தது. விலை ரூ. **2**. (கிடைக்குமிடம்:— ஆசிரியர், பிராமணத் தெரு, சித்தூர்]. ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள ஸுபாஷிதங்களையும் நீதிகளையும் தொகுத்து, ஸரளமான இங்கிலீஷ் மொழி பெயர்ப்புடன் இவ்வாசிரியர் வெளியிட்டிருக்கிறார். மூலம் தேவநாகரி லிபியில் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் மாணவர்களுக்கும் இங்கிலீஷ் தெரிந்த ஸ்ரீமத் ராமாயண ரஸிகர்களுக்கும் பயன்படும்.

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்ந வ்யாக்யாநம், சதுச்லோகீ வ்யாக்யாநம், ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யாநம் (ப்ரமாணத்திரட்டுடன் கூடியது.)—[பதிப்பாசிரியர்:— ஸ்ரீ. K. ஸ்ரீநிவாஸய்யங்கார் அட்வொகேட், 3, புத்தூர் அக்ரஹாரம் திருச்சி. விலை. ரூ. **3**]'நாதயாமுந மத்யமாம்' என்று குருபரம்பரையில் நடுநாயகமாகப் பேசப்பட்ட ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ர ரத்நத்தின் பெருமையையும் சதுச்லோகியின் பெருமையையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நன்கறிவர். நம் ஸித்தாந்தத்தின் உண்மைகளை ஸம்ஸ்க்ருதத்தில் வெகு ஸரளமாகவும் உருக்கமாகவும் ஸ்தோத்ர ரூபமாய் முதல் முதலில் வெளியிட்ட ஆசார்யன் என்ற பெருமை ஸ்ரீ ஆளவந்தாருக்கே உரியது. இவ்விரண்டு ஸ்தோத்ரங்களுக்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ஸம்ஸ்க்ருதத்தில் அருளிச்செய்த பாஷ்யம், ஏற்கனவே நாகர லிபியிலும் க்ரந்த லிபியிலும் அச்சிடப்பெற்று ரஸிகர்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறது. இவற்றை ஸ்ரீ வேதாந்ததீபிகை வாயிலாகவும் ஸ்ரீ. உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி தமிழ்மொழி பெயர்ப்புடன் வெயிட்டிருக்கிறார். ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த மணிப்ரவாள வ்யாக்யாநத்துடன் தமிழ் லிபியில் அச்சிடப்பெற்ற ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம் கிடைப்பது அரிதாயிருக்கும் ஸமயத்தில், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி ஷெ ஸ்தோத்ரங்களை அந்த வ்யாக்யாந ஸஹிதமாய் வெளியிட முன்வந்தது போற்றற் குரியது. இப் பதிப்பில் மூலமும் ப்ரமாண வாக்யங்களும் நாகர லிபியிலும் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ச்லோகங்களுக்குப் பதவுரையும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. முடிவில் ஸம்ஸ்க்ருத ப்ரமாணத்திரட்டும் (ப்ரமாணங்களுக்கு அர்த்தத்துடன்) சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் வெளி வந்திருக்கும் சதுச்லோகீ வ்யாக்யாநத்திற்கும் ஜிதந்தே வ்யாக்யாநத்திற்கும் பெரியவாச்சான்பிள்ளைதான் ஆசிரியரா இல்லையா என்ற சர்ச்சையில் நாம் இறங்க விரும்பவில்லை. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம், சதுச்லோகீ, ஜிதந்தே ஸ்தோத்ரம் இவைகளை ஸஹ்ருதயர்கள் அநுபவிப்பதற்கு இப்புஸ்தகம் மிகவும் உபயோகமாயிருக்கு மென்பதில் ஒருவருக்கும் விப்ரதிபத்தி யிராது. பெரியவாச்சான் பிள்ளையின் அருளிச்செயல் வ்யாக்யாநங்கள் ப்ரமாணத் திரட்டுடன்

விரைவில் வெளிவருமென்று இப்பதிப்பாசிரியர் முகவுரையில் கூறியபடி, அருளிச்செயல் வ்யாக்யாநமும் சீக்கிரம் இம்மாதிரி நல்ல முறையில் பதிப்பிக்கப்பட்டு வெளிவருமென்று எதிர்பார்க்கிறோம்.

(3) ஸ்தோத்ரமாலா-[பதிப்பாசிரியர்:-ஸ்ரீ. P.B. அண்ணங்கராசார்யர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம். விலை ரூ. 2.] முகுந்தமாலை, சதுச்லோகீ, ஸ்தோத்ரரத்நம், கத்யத்ரயம், பஞ்சஸ்தவம் முதலிய பூர்வாசார்யர்கள் அருளிச் செய்த ஸ்தோத்ரங்கள் நாகர லிபியில் ஒரே ஸம்புடத்தில் முதல் முதலாக அச்சிடப்பட்டிருக்கின்றன. ச்லோகங்களுக்கு அகராதி க்ரமத்தில் அநுக்ரமணிகையும் முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பதிப்பாசிரியர் நாகர லிபியில் வெளியிட்டிருக்கும் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் ஸ்தோத்ர மாலையிலும் இந்த ஸதோத்ர மாலையிலும் நம் ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் அருளிச் செய்த ஸ்தோத்ரங்கள் அனைத்தும் நாகர லிபியில் அச்சிடப்பெற்று அடங்கியிருக்கின்றன.

புஸ்தகங்கள் வரவு

(1) திவ்யப்ரபந்த ஸாராம்ருதம் :—திருப்பல்லாண்டு முதல் நாச்சியார் திருமொழி முடிய முதலாயிரத்தின் ஸார ஸங்க்ரஹம் காஞ்சீ. ஸ்ரீ. ப்ர. அண்ணங்கராசார்யர் இயற்றியது. விலை. 0—12—0.

(2) பெருமையும் பொறுமையும் :—[திவ்யப்ரபந்த வ்யாக்யாநங்களில் குறை கூறினவர்களுக்கு விடை.] இயற்றியவர்:—ஸ்ரீ. M. பார்த்தஸாரதி, 31-A நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு, சென்னை. விலை. 0—3—0.

பாக்கி சந்தாதாரர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்

சென்ற மாதத்து ஸஞ்சிகையில் சந்தா பாக்கி செலுத்த வேண்டியவர்களின் பெயர்களை இந்த ஸஞ்சிகையில் வெளியிடுவதாக எழுதியிருந்தோம். 1947, 1948, 1949 இந்த மூன்று வருஷத்திய சந்தாவைச் செலுத்ாதவர்களின் பெயர்களையும், மூன்று வருஷத்திற்கு மேற்பட்ட சந்தாபாக்கி உள்ளவர்கள் பெயர்களையும் கீழே வெளியிட்டிருக்கிறோம். அவர்கள் க்ருபை செய்து தங்கள் பாக்கியை உடனே அனுப்பிவைக்க வேண்டுமென ப்ரார்த்திக்கிறோம்.

மூன்று வருஷ சந்தா பாக்கிதாரர்கள்

நெ.	சந்தா நெ.	பெயரும் விலாஸமும்	வருஷங்கள்	பாக்கித் தொகை ரூ.
1	2	ஸ்ரீ. M. N. ஸ்ரீநிவாஸராகவன், மோஹனூர்	1947, 48, 49	9
2	32	,, P. S. திருமலை, விருதுநகர்	,,	9
3	78	,, R. கிருஷ்ணஸ்வாமி, மாதுங்கா, பம்பாய்	,,	9
4	114	,, S. ரங்கநாதய்யங்கார், ,, ,,	,,	9
5	132	,, D. ராமாநுஜ ஐயங்கார், திருநெல்வேலி	,,	9

நெ.	சந்தா நெ.		பெயரும் விலாஸமும்	வருஷங்கள்	பாக்கித் தொகை ரூ.
6	160	,,	பந்தல்குடி ஸௌம்ய நாராயணாசாரியர், குளித்தலை	1947, 48, 49	9
7	183	,,	K. ஸுந்தரராஜய்யங்கார், துவரிமான்	,,	9
8	192	,,	S. நரஸிம்மன், கல்கத்தா	,,	9
9	235	,,	V. S. நரஸிம்மாசாரியர், கும்பகோணம்	,,	9
10	242	,,	V. ரங்கஸ்வாமி ஐயங்கார், உதகை	,,	9
11	246	,,	M. S. விஜயராகவாசாரியர், சோகத்தூர்	,,	9
12	263	,,	K. ஸ்ரீனிவாஸன், திருமணம்	,,	9
13	278	,,	வாத்யார். சேஷாத்ரி ஐயங்கார், திருக்கண்ணமங்கை	,,	9
14	399	,,	S. நாராயண ஐயங்கார், மதுரை	1946, 47, 48, 49.	12
15	400	,,	V. வெங்கடராகவய்யங்கார், விழுப்புரம்	,,	12
16	405	,,	K. S. மாதவாசாரியர், கும்பகோணம்	1947, 48, 49.	9
17	412	,,	S. நாராயணய்யங்கார், உளுந்தூர்பேட்டை	,,	9
18	460	,,	R. ராமய்யங்கார், P. T. சென்னை	,,	9
19	470	,,	ஸி. பாட்டராசாரியர், கும்பகோணம்	,,	9
20	478	,,	E. ஸ்ரீநிவாஸாசாரியர், மேல்மா	1946, 47, 48, 49.	12
21	446	,,	K R. பத்மநாபாசாரியர், V. T. பம்பாய்	1947, 48, 49,	9
22	552	,,	K. R. நரஸிம்மராகவன், சேலம் டவுன்	,,	9
23	558	,.	ஸ்ரீநிவாஸவரதாசாரியர், மேல்பாக்கம்	,,	9
24	588	,,	K. S. சேஷய்யங்கார், காட்டாம்பட்டி	,,	9
25	595	,.	R. திருமலை ஐயங்கார், நாகனூர்	,,	9
26	626	,,	V. கிருஷ்ணமூர்த்தி, குளிக்கரை	1946, 47, 48. 49.	12
27	646	,,	R. ஸ்ரீநிவாஸன், திருவல்லிக்கேணி	1947, 48, 49.	9
28	661	,,	T. S. சேஷய்யங்கார், ஸ்ரீரங்கம்	,,	9
29	674	,,	S. R ஐயர், நாமக்கல்	,,	9
30	681	,,	V. ரங்காசாரியர், கோயமுத்தூர்	,,	9
31	685	,,	V. ஸ்ரீநிவாஸன், ஆராகூர்	,,	9
32	688	,,	S. வெங்கடவரதாசாரியர், முக்கூர்	1946. 47, 48, 49.	12
33	689	,,	T. ராஜகோபாலாசாரியர், மன்னார்குடி	1947, 48. 49.	9
34	692	,,	T. S. குப்புஸாமி, கல்கத்தா	,,	9
35	693	,,	N. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா	,,	9
36	705	,,	V. லக்ஷ்மிநரஸிம்மாசாரியர், பெங்களூர் ஸிடி	,,	9
37	718	,,	V. தேசிகாசாரியர், மயிலாப்பூர்	,,	9
38	719	,,	C. V. ராமாநுஜாசாரியர், சேஷாத்ரிபுரம்	,,	9
39	726	,,	K. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், தி. நகர்	,,	9
40	728	,,	K. ராமஸ்வாமி ஐயங்கார், மல்லேச்வரம்	,,	9
41	733	,,	T. பார்த்தஸாரதி, தேவகோட்டை	,,	9
42	741	,,	A. V. ராஜகோபாலய்யங்கார், ஸிக்கந்திராபாத்		9
43	743	,,	S. C. திருவேங்கடாசாரியர், ஸுமங்கலி	,,	9
44	789	,,	P.T. விஜயராகவாசாரியர், பழையசீவரம்	,,	9
				ஆக மொத்தம் ரூ.	411

இன்னும் பலர் **1948, 1949**—இவ்வருஷங்களின் சந்தாவைச் செலுத்த வில்லை. அவர்களும் சந்தாவைச் சீக்ரத்தில் அனுப்பவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகை சுற்றிவரும் ராப்பரில் மேல் விலாஸத்தில் அந்தந்த சந்தாதாரரின் பெயருக்கு முன்னால் ஒரு நம்பர் குறிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் அந்த சந்தாதாரர்களின் சந்தா நம்பர். சந்தாதாரர்கள் மணியார்டர் அனுப்பும்போது ஷி சந்தா நம்பரையும் தங்கள் முழு விலாஸத்தையும் கூபனில் அவசியம் குறிப்பாக எழுத வேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

ஒப்பந்தம் (Contract) விளம்பரங்களுக்குக் கட்டணம் இன்னும் குறைவாகும்.

(குறிப்பு) முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், வேப்பேரி, மதராஸ்-7.

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத்
தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டிய தில்லை.

மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.
தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—
P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்களருளிச் செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

Regd. M. 4437.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜெண்டுகள் காபி 1-க்கு 4 அணு வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1949ஷ அக்டோபர் மாஸத்துச் சந்தா வரவு

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வருஷம்		தொகை
80	ஸ்ரீ.	S. வெங்கடரங்கய்யங்கார், கங்கவல்லி	1949	ரூ	3—0—0
136	,,	D. சேஷய்யங்கார், பெண்டபாடு	48, 49		6—0—0
137	,,	P. S. கோவிந்தய்யங்கார், ஸ்ரீரங்கம்	49		3—0—0
144	,,	R. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீரங்கம்	49		3—0—0
179	,,	K. R. ராமஸ்வாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி	49		3—0—0
214	,,	ஸ்ரீநிவாஸ கோபாலய்யங்கார், வடசருக்கை	48		3—0—0
230	,,	K. பார்த்தஸாரதி, பம்பாய்	49		3—0—0
390	,,	P. K. ஸ்ரீநிவாஸ கோபாலாசாரியர், திண்டிவனம்	50		3—0—0
407	,,	S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்	48, 49		6—0—0
466	,,	P. ராகவாசாரியர், சானனூர்	49		3—0—0
557	,,	R. சேஷய்யங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர்	49		3—0—0
683	,,	கமலம்மாள், தாமல்	49		3—0—0
737	,,	K. S. R. ஆச்சார்யா, கோடம்பாக்கம்	49		3—0—0
764	,,	V. S. ஐயங்கார், பம்பாய்	48, 49		6—0—0
784	,,	S. திருமலை ஐயங்கார், செம்பூர்	49		3—0—0
834	,,	P. N. ஈசுவர (ராமானுஜ) ஐயர், கள்ளிக்கோட்டை	50		3—0—0
848	,,	W. ராஜாராம் நாயுடு, ஆலந்தூர்	49, 50		1—0—0
			ஆக மொத்தம்		58—0—0

குறிப்பு:—ஒரு சந்தாதாரர் ரூ. 6-ம் மற்றொருவர் ரூ. 3-ம் எமக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூபனில் தங்கள் பெயரையோ, விலாஸத்தையோ, சந்தா நம்பரையோ ஒன்றையும் எழுதாதால், அவர்கள் பெயர்களை வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம். அவர்கள் உடனே தங்கள் மணியார்டர் ரசீதுகளை எமக்கு அனுப்பி, சந்தா நம்பரையும் முழு விலாஸத்தையும் தெரிவிக்க வேண்டுகிறோம். இனி, சந்தாதாரர்கள் தங்கள் மணியார்டர் கூபனில் தங்கள் சந்தா நம்பரையும் பெயரையும் முழு விலாஸத்தையும் மறக்காமல் தெளிவாக எழுதும்படி மற்றுமொருமுறை அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸம்பாதகர்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.